"மாறன்" தமிழ்நூற் பதிப்புக் கழகத்தின் வெளியீடு நெ-2.

பல வித்துவான்கள்

பாடிய

வண்ணத்திரட்டு.

"மாறன்" தமிழ்நூற் பதிப்புக் கழகம்

புரசை, சென்னை.

ஸ்ரீ சாது ரத்தின சற்குரு புத்தகசாலை,

4-34, நயினியப்ப நாயக்கன் தெரு, பார்க்டவுன் போஸ்ட், சென்னை

ஆனந்த ராமாயணம்

இதுவும் வால்மீகி மகாரிஷியால் வடமொழியில் இயற்றப்பட்டது இதைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறோம். இதில் வால்மீகி ராமாயணத்தில் இல்லாத அநேக விஷயங்கள் அடங்கி யுள்ளன. ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்ருக்னர்களுடைய ஜனனமும், வளர்ப்பும், சீதா தேவியினுடைய ஜனனமும் அத் தேவிக்குப் பல பெயர் வந்ததற்குக் காரணமும் விளக்கி யிருப்பதுடன் படிப்பதற்கு வெகு இனிமையாகவுமிருக்கும் ஆனந்தராமாயணமென்ற இதன் பெயருக்கேற்றபடி படிப்போர்மனதிற்கு உற்சாகமும் ஆநந்தமும் உண்டாக்குமென்பதில் தடையில்லை. இதுவரையில் தமிழ்ப்பாஷையில்வெளிவராதது. ஆகையால் நமது தமிழ் அபிமானிகள் ஒவ்வொருவரும் வாங்கி வாசித்துப் பயன்பெறும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம் இப் புத்தகம் ஒன்பது காண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

இதில் அடங்கிய காண்டங்களின் விபரம்:—

1. ஸார காண்டம், 2. யாத்ரா காண்டம், 3. யாக காண்டம், 4. வியாச காண்டம், 5. ஜன்ம காண்டம், 6. விவாக காண்டம், 7. இராஜ்ய காண்டம், 2-பாகங்கள் 8. மனோகர காண்டம், 9. பூர்ண காண்டம், 13-அழகிய ஆப்டோன் படங்களுடன் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு காலிக்கோ தங்ககிலிட்டுபையிண்டுடன் விலை ரூபா-6.

"மாறன்" அச்சுக்கூடம் புரசை சென்னை.

"மாறன்" தமிழ்நூற் பதிப்புக் கழகத்தின் வெளியீடு நெ. 2.

பலவித்துவான்கள் பாடிய

வண்ணத்திரட்டு.

சென்னைப்
பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
கா. ர. கோவிந்தராஜ முதலியார்
அவர்கள் மாணவர்
பு. அ. கோவிந்தராஜ நாயகர் அவர்களால்
பார்வையிட்டது

சென்னைப் புரசை
"மாறன்" அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

குரோதன ஸு.

[இதன் விலை 1926 அணா 8.]

ரெஜிஸ்தர் செய்தது.

அட்டவணை.

13. தன்னச்சந்தப் புறனடை; தன்னச்சந்தம் மெலித்தலால் தனச்சந்தமாம்.

உதாரணம்:—

தன்ன	தன
சண்மு	ச(ண்)மு
மன்வில்	ம(ன்)-வில்

தன்னதன - சண்முசண்மு

வண்ணத்தியல் வெண்பா:—

"எட்டுக் கலையா யிடையிட் டெதுகையாய்க்
கட்டுக் கலைக்குமுக் கண்ணியாய்—முட்டமுட்டத்
தொங்கலு மாகித் தொடையும் பலவாகிப்
பங்குபெறும் வண்ணத்தின் பண்பு."

அகவல்:—

"முதற்கலைக் கிடுவது தெய்வச் செயலே
இரண்டற் கிடுவது கிளைகொடை விருது
மூன்றற் கிடுவது புகழும் வாகையும்
நான்கற் கிடுவது நாடு நகரமும்
மற்றைப் பாதி நற்று யிரங்கல்
கல்வியின் மகிழ்வதுங் கழறுவர் வண்ணமே
வேறு துறையினும் விளம்புவர் புலவர்."

முற்றிற்று.

கா. ர. கோவிந்தராஜ முதலியார்
தமிழ்ப் பண்டிதர்.

வண்ண வியல்பு.

1 வல்லினம்பற்றித் தத்தவுமுன்பின்
னீடலும்பிறக்குமெல்லினம்புணர்ந்து
தந்தவுநீட்சியுந் தன்னவும்பயக்கு
மிடையினந் தய்யவியங்கச்செய்யுந்
தனவும்பெருக்கமும்பொதுப்படவருமே.

2 தத்தவுந் தன்னவுந் தய்யவுந் தனவு
நால்வகைக்குலமென நவிலத் தகுமே.

3 இருவகைச்சந்தமும்பிறழுஞ்சிற்சில
வைந் தாங்குலமென் றறைவது துணிவே.

4 தத்தவுந் தந்தவுந் தாத்தவுந் தாந்தவு
மாண்பாலாமென் றறைவதுமுறையே.

5 தன்னவுந் தய்யவுந் தனவுந் தானவும்
பெண்பாலாமெனப்பேசிடத் தகுமே.

6 தனவுந் தய்யவுந் தன்னவும்பிறழ்வன
வனைத்துமலிப்பாலாமெனன்முறையே.

7 தத்தாவெனவரலாதியைப்பெருக்கிக்
குசக்குலமுதலியகூறலும்பிறழ்ச்சியி
னீட்சிபற்றிக்கன்மரமாதிய
முதிரலிவகுத்தலுமுறையேயாயினும்
பயனின்மைகருதிப்பகர்ந்திலமன்றே.

8 எவ்வழியெவரெவரியம்பும்வண்ணமு
மாறுசமயமுமவற்றின்புறம்பும்
வீறுபொதுநெறிவிளக்கமும்போன்றூ
ரெண்வகைத்தாகியிலங்குறுமெனத் தேர்ந்
தியம்புநர்க்கருட்பேற்றிச்சையுண்டாமே.

9 தன்னவுந்தய்யவுந்தனவெனத்தொனிதரு
சந்திவேற்றுமையிடைமெய்க்கெலாமதனதன்
வருக்கத்துயிர்மெய்தான்வரவொண்ணாத
திம்முறையந்நூலினத்தைச்சுட்டிடல்
போற்சிலர்மயங்கப்புகன்றதன்றே.

10 இருவகைவண்ணமொன்றோடொன்றிசைவுறு
மிடத்தைச்சந்தியென்றியம்புவர்பெரியோர்.

11 மெல்லினமெய்யீற்றுள்ளவண்ணத்தொடு
வல்லினத்துயிர்மெய்முதலுளவண்ணம்
பொருந்திரண்டரைச்சந்தமெனலா
மிரண்டேயாமென்றிசைப்பார்சிலரது
குத்தலென்றுரைக்குங்குற்றமாமே.

12 ஈற்றலிடையினவொற்றுறும்வண்ணச்
சொல்லொடுவேறினத்தொற்றுப்புணர்ந்துமவ்
வண்ணந்தோன்றும்வராதொழியினுங்
குத்தற்குற்றமென்றுரைப்பதுகுணமே.

13 தத்தனவெனலுந்தந்தத்தவெனலுந்
தனத்தாவென்றிடலாதியபிறவுந்
தொடர்ச்சியியல்பெனச்சொல்வதுமுறையே.

14 தத்தவிற்றாத்தவுந்தந்தவிற்றாந்தவுந்
தனவிற்றானவும்பிறந்தவாறு
தன்னதய்யவில்வருமெனமருளா
தம்முறைதோற்றலுந்தானச்சந்தந்
தானெனத்துணிவுறத்தகுந்தகுந்தகுமே.

15 ஒவ்வோர்வண்ணமுஞ்சிற்சிலசொற்கொளு
மவற்றுட்டனவிற்சுருக்கமுந்தானவிற்
பெருக்கமுமிலையெனப்பேசத்தகுமே.

16 தனவுந்தானவுமெளிதினுமெளியன
தத்தவுந்தந்தவுமெளியனதாத்தவுந்
தாந்தவும்வலியனதய்யவுந்தன்னவும்
வலிதினும்வலியனவென்பதுவழக்கே.

17 துறைபகர்வண்ணப்பாவின்முற்பகுதியை
யாண்கலையென்றுமற்றேனையைப்பெண்கலை
யென்றுமுலகோரியம்பிடன்மிகையே.

18 அடிகளினீற்றுக்குழிப்புச்சிதைவுறத்
தொகுத்தன்மிகைபடும்வாய்பாடாயினுந்
திருந்தக்கூறிடல்சிறப்பினுட்சிறப்பே.

19 கொடுந்தமிழ்ப்புணர்ச்சிவண்ணமாயினும்
பொருட்சுவையாதியநலம்பலபொருந்திற்
றமிழ்க்கடற்குளிப்பவர்தழுவல்சற்றுளதே.

20 மதுரங்குன்றிக்கிடப்பினும்வைத்துள
குழிப்புப்பிறழாவண்ணங்குளறிடி
லஃதுணர்புலவர்சற்றகமகிழ்வாரே.

21 ஆகாவளபெடையனையினுமம்முறை
துள்ளளேழுறுந்துலக்கவல்லானே
லஃதுமோர்வியப்பென்றறைவார்சிலரே.

22 அந்நூலொப்பாக்குற்றநான்கினுக்கு
ளிந்நூன்மூன்றிசைந்திருப்பனென்பா
ருற்றுநோக்குமுணர்வுறுதவரே.

23 ஓசையுங்கனமுமுலவாவூக்கமுந்
தொண்டுந்தோய்வுறீஇத்துலங்கியவண்ண
மந்நூலொப்பிடலாயகுற்றங்களு
மில்லாதுறுமெனிலேற்றத்தேற்றமே.

24 இம்முறையாவுமுன்னெடுத்துக்காட்டிய
நூற்பொருளுணர்ந்துள நுண்ணியர்க்குவகையு
மற்றையர்க்குலவாமயக்கமுந்தருமே.

25 கருணைக்கடலெனச்சத்திவேலென்ன
வென்றிமழுவெனத்துவக்கியோர்மூன்று
வண்ணமிவற்றினுக்கிலக்கியமென்றே
கருதிக்கூறினமற்றும்பற்பல
வண்ணமும்வகுப்பும்விருத்தமும்பகர்ந்துள
மவைகளுந்துணையாமறியவேண்டுநர்க்கே.

26 எட்டுப்பதினாறெண்ணான்கெட்டெட்
டென்னுநாற்பகுதியிற்கலைவகுத்தொருநா
லெதுகையுமோனையுமிலங்கக்காட்டி
யொருபொருட்புகழையுரைப்பதுவகுப்பே.

27 இயலிசைநாடகமென்னும்பகுதியி
லணிகெடல்குதித்தலாதியகுற்றந்
தெரியுங்கண்கொடுதிகழ்பொதுவண்ணக்
குழிப்பின்புணர்ச்சியுணர்வதுகுணமே.

28 தமிழ்க்கவியணைத்தினுந்தலையென்றுள்ள
வண்ணவியல்பிணைவகுத்தனமகிழ்ந்தே.

முற்றிற்று.

நெல்லையம்பதி தண்டபாணி சுவாமிகள்.

நெல்லையம்பதி

தண்டபாணி சுவாமிகள்

இயற்றிய

வண்ணம்.

அவயவமெழுதரிதெனல்.*

ஆண்கலை.

தனனா தனனா தனனத் தனன தத்த
தனனா தனனா தனனத் தனன தத்த
தனனத் தனனதத்த தனனத் தனனதத்த
தனனத் தனனதத்த தனதத்த தான
தனனதனாதனத்த தத்ததய்யனா.

குருதேசிகனார் சிவசுப் பிரம ணிக்கு
விலைநா மெனவே தமிழிற் கவிதொ டுக்கு
மருமைப் புலவர்சித்த மலரிற் றினநடிக்கு
மிருபொற் கழல்படைத்த பெருமைக்கு மாரர்

கருணா கரவேள் பொதியக் கிரியி லுற்ற
குருமா முனிபா லருண்மெய்ப் பொருளை யொப்பி
லொருகைக் கிளியினுக்கு முதரிப் புகழ்பொறுத்த
கருணைக் கடல்படைக்கை பெருசுத்த வீர

குலசே கரனார் சகுணக் கடவு ளர்க்கு
ளுயர்சீ ருடையார் தனிநிட் களவி ருப்ப
மருளிற் றருமொருத்தர் முதன்மைக் கடவுள்செட்டி
மனையிற் குளுமுகித்த புனிதக்கு லலர்

அயிலதனாலமர்க்க ளத்தைவெல்லுவார்,

---

* அவயவமெழுதரிதென்ற துறையை 29-ஆம் பக்கம் பார்க்க.

கொலைவே ரறவே கருதித் தவமி யற்று
மவர்பா லணிமா மயிலிற் றிகழ்சி றுக்கர்
புலமைத் திறன்மிக்கு மொருபத் தன்வசமற்று
வெருளச் செயலகைக்கொ ரெமனொத்த பாலர்

அருணு புரியா லயவட் டமதி னுக்குண்
மனையா டனையோர் தவசிக் குதவு பத்த
னதுகைப் பொருண்முடித்த சிகரிக் குவடபக்க
மொருசொற் பகருநித்த ருலகச்ச காயர்

குளிர்தா மரையா கியதொட் டிலத னுக்கு
ளொருசே யெனவா வியிலுற் றமுரு கப்பர்
தருணத் திலெமதிச்சை வழிநிற் குமுயர்சித்தர்
பொருகுக் குடமுழக்க மலிவுற்ற தோளர்
அடியவர்வாய்மையைக் கருத்திலுள்ளுவார்,

திருநீ றணியா தவரைக் கறுவி மிக்க
மதுரா புரியூர் வழுதக் கருள்கொ டுத்த
கலையற் றவனைமெச்சு மவருக் கினியர்சட்டி
விரதத் தினர்கருத்து முடியச்செய் தேவர்

துணிவே வடிவா கியசத் தியம துற்ற
கவுமா ரரையோர் கொதுகிற் கருது நர்க்கு
நிலைகெட் டறிவுகெட்டு வழிகெட் டழகுகெட்டு
வழிகெட் டலையுநட்ட முறவிட்ட வேடர்

திரையா ழியில்வா ழவுணக் கருவ றுத்த
பெருமா ணெடுமால் விழிபெற் றமக ளிர்க்கொ
ருரிமைக் கணவர்பற்பல் கனவிற்பல் வடிவத்தொ
மொளிர்சத் திபெறுமிட்டர் மலையுச்சி யாளர்
செயிரறுசீர்தொடுத்து மெத்தநல்குவார்,

சினமா முகில்சேர் பொழியி லிற்றினை விளக்குண்
மயில்போல் வருவார் மயன்முற் றியவர் செப்பு
மொழியிற் பரதவித்து விழியிற் சுழல்வதுற்று
வலியத் தொழுதிரக்கும் விடர்சுற்று சாரல்

வளமே லிடலா லிமயக் கிரியும் வெட்க
வடமே ருவைநேர் சொலநிற் குமெழில் பெற்று
முனிவர்க் குமமரர்க்கு முரகர்க் குமனிதர்க்கு
மிவரொக் குமவரொக்கு முயிரொத்து நீடு

செயலோ டொருமா நதிமத் தியிலெ னக்கு
மொருநா ளொருபே ரறிவுட் டிடவு ணர்த்தி
மலயக் கிரியினுக்கு மகள்பெற் றமகவொத்து
முதிர்சொற் பனுவல்கட்கு மிகவிச்சை யான

திருவுருமாமலைக்க டுத்தநெல்லையாய்,

பெண்கலை.

புருகூ தனைமா யவனைக் குகனை வெற்றி
மலர்மா ரனைநேர் வடிவுற் றவனை யப்பெண்
மனதிற் றினநினைப்பள் வெளியிற் கபடம்வைத்து
மயலற் றவர்களொக்கு மொழிசெப்பு வாள்மெய்

அதைநீ யறியா துலகிற் பலரு மெச்சு
மடலே றிடநா டினையப் படிவ ருத்த
முயல்வுற் றமுனைவற்ற பனைமட் டைகளறுக்கும்
வருவத் தனையுளொற்றை விதிதப்பி னீதி

புரிவோன் வடிவாள் கொடுவெட்டு முடன் முற்று
மதனீர் வருமோ விதனிற் றுணிவு பெற்று
மவள்பொற் பெழுதநத்தி யெனையொப் பெனவிசைத்த
துனையொத் தவர்கள்பற்று மியல்பிற் கொவாது

பயிலருநூன்மிகப்ப டித்தசெல்வனே,

புதுமா மலர்சூ டியமைக் குழல்வ னப்பு
வரைவா யரனார் கவியிற் புகழு மொப்பின்
மணமெப் படியமைப்பை யிசையெப் படியிசைப்பை
நுதலொத் தெழுதிவைக்கி லதுவெட்டு மோசொல்

வழிவேல் வரைவா யவைகட் குணசி மிட்டு
நயமா தியசீ ருறவைப் பதிலை மெய்ச்சொல்
குழையிட் டசெவிசற்று மசைவற் றெழுதிவைப்பை
யலர்துத் திமலரொத்த பணியிட்ட நாசி

பொறியால் வரைவாய் மணமெப் படிமு கக்கு
மிதழ்வாய் வரைவாய் நகையொப் படிந கைக்கு
முரையெப் படியுரைக்கு மமுதெப் படியளிக்கு
வரைவுற் றகவுண்முத்த மிடவொப்பு'வாய்கொல்
படமொடுதூரியத்து மிச்சைகொள்வதேன்,

விருகா சுரனு லவனைப் பொடிய விட்ட
நெடியோன் வளைநேர் களமப் படிய மைக்கி
லுயர்புட் குரல்களெட்டு ளொருசத் தமும்விளைப்ப
திலைபொற் கிரிகளொத்த முலைமுற்று நாடி

யறியா யெவணீ யெழுதத் தகும ணத்த
தொயிலார் சிறுதோ ளதுதொட் டுவிரன் மட்டு
நினவிற் றிகழுமட்டி லெழுதிக் கொளினுமிச்சை
முடியத் தழுவிநித்த மகிழச்செ யாது

விடநா கமும்வா ழையுமொக் குமவை முற்சொல்
சிலநீ யொருவா றறிதற் குமிட மற்று
மறைவுற் றிடவுடுத்த கலைசுற் றிடுமவற்றை
மனதிற் கருதல்பற்றி யெழுதற்கொ ணாது
மயிலனையாடனைத்து தித்துவெளவினல்,

மிளிர்தா டலைமே லுறவைத் திடல்கி டைக்கு
மிகழ்வா ரடல்வே ளெனமெச் சுபுகழ் கிட்டு
மதனப் பயல்விடுத்த கணைபட் டுவடுவுற்ற
மெலிவற் றிடுமௌப்பில் சுகசித்த மாகும்

இதுதான் முறையா மிதைவிட் டுனுயி ரற்ப
மெனநா டுதல்வீ ணதைவிட் டுவிடு முற்சொல்
விதியிற்செயினுமக்க ளினரிற் சிலர்வட்கு
ளிவனைப் புனருநட்ப திலைவித்தை யாடி

வெளிரு கியநீர் தெருவிற் சிதறி விட்டு
நெறியோர் பவனு மரசற் குமய லிட்டு
மலறிற் றருவையொத்த மகனைக் கொடுநடக்கை
கொடிதிற் கொடிதெனச்சொ லுவர்செப்பு மாறு
மருவிடுவாய்களிப்ப னைத்துமெய்துமே.

முற்றிற்று.

சென்னைப்

பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத்

தலைமைத் தமிழ்ப் பண்டிதர்

கா. ர. கோவிந்தராஜ முதலியார்

அவர்களியற்றிய

வண்ண விருத்தம்.

தந்தன தந்தன தந்தன தந்தன
தந்தன தந்தன தனதான.

பங்கய மங்கையு மம்புவி யென்றுரை
பங்கமி லன்புறு மொருமானும்
பண்புட னிங்கித வின்சொலு டன்பயில்
பந்தண வுந்தன முறநாடுந்
துங்கமி லங்குர வெங்குமி லங்கிடு
சுந்தர வம்பர வெனநாடின்
துன்றழி வின்றிய வின்பமி கும்பதி
துன்றவ ரந்தரு பெருமானே
இங்கொரு பென்சிறு புன்பல மன்றியி
லென்றனை யிங்கடு துயர்தானென்
இந்தவி தங்கொடு வெந்துய ரின்பட
எந்தவி தம்புரி தரலாமன்
செங்கதி ருந்தகு தண்கதி ரும்புரை
செங்கையி லங்கிரு படையாயுன்
செஞ்சர ணங்களை நெஞ்சினி லங்கினோர்
திங்களை னும்படி பொலிவேனே.

முற்றிற்று.

பட்டினத்துப் பிள்ளையார்

உடற்கூற்று வண்ணம்.

தன தனதான தன தனதான
தந்ததனந்தன தந்ததனந்தன
தனன தனந்த தனன தனந்த
தானன தானன தானன தந்த
தந்ததன தான தனதானனு.

ஒருமடமாது மொருவனுமாகி
யின்பசுகந்தரு மன்புபொருந்தி
யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
வூறுசுரோணித மீதுகலந்து

பனியிலொர்பாதி சிறிதுளிமாது
பண்டியில்வந்துபு குந்துதிரண்டு
பதுமவரும்பு கமடமிதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற

உருவமுமாகி யுயிர்வளமாத
மொன்பதுமொன்றுநி றைந்துமடந்தை
யுதரமகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமு நாளுமறிந்து

மகளிர்கள்சேனை தரவணையாடை
மண்படவுந்தியு தைந்துகவிழ்ந்து
மடமயில்கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து

ஒளிநகையூற லிதழ்மடவாரு
வந்துமுகந்திட வந்துதவழ்ந்து
மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிருபோவென நாமம்விளம்ப

உடைமணியாடை யரைவடமாட
வுண்பவர்தின்பவர் தங்களொடுண்டு
தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோடிநடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே.

உயர்தருஞான குருவுபதேச
முந்தமிழின்கலை யுங்கரைகண்டு
வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதினாறுபி ராயமும்வந்து

மயிர்முடிகோதி யறுபதநீல
வண்டிமிர்தண்டொடை கொண்டைபுனைந்து
மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க

மதனசொரூப னிவனெனமோக
மங்கையர்கண்டும ருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில்போலவர் போவதுகண்டு

மனதுபொறும லவர்பிறகோடி
மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை
மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி

ஒருமுதலாகி முதுபொருளாயி
ருந்ததனங்களும் வம்பிலிழந்து
மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து

வளமையுமாறி யிளமையுமாறி
வன்பல்விழுந்திரு கண்களிருண்டு

வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோதகு ரோதமடைந்து
செங்கையினிலோர்த டியுமாகியே,

வருவதுபோவ தொருமுதுகூனு
மந்தியெனும்படி குந்திநடந்து
மதியுமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல்வி டாமன்மொழிந்து

துயில்வருநேர மிருமல்பொருது
தொண்டையுநெஞ்சு முலர்ந்துவறண்டு
துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு

கலியுகமீதி லிவர்மரியாதை
கண்டிடுமென்பவர் சஞ்சலமிஞ்ச
கலகலவென்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து

தெளிவுமிராம லுரைதடுமாறி
சிந்தையுநெஞ்சுமு லைந்துமருண்டு
திடமுமலைந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வேதெனநொந்து

மறையவன்வேத னெழுதியவாறு
வந்ததுகண்டமு மென்றுதெளிந்து
இனியெனகண்ட மினியெனதொந்த
மேதினிவாழ்வுநி லாதினிநின்ற

கடன்முறைபேசு மெனவுரைநாவு
றங்கிவிழுந்துகை கொண்டுமொழிந்து
கடைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமுநின்று
நெஞ்சுதடுமாறி வருநேரமே,

வளர்பிறைபோல வெயிறுமுரோம
முஞ்சடையுஞ்சிறு குஞ்சியும்விஞ்ச
மனதுமிரண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள்வந்து

வலைகொடுவீசி யுயிர்கொடுபோக
மைந்தரும்வந்துகு னிந்தழநொந்து
மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து

பழையவர்காணு மெனுமயலார்கள்
பஞ்சுபறந்திட நின்றவர்பந்த
ரீடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேகவி சாரியுமென்று

பலரையுமேவி முதியவர்தாமி
ருந்தசவங்கழு வுஞ்சிலரொன்று
பணிதுகிலொன்கல் களபமணிந்து
பாவகமேசெய்து நாறுமுடம்பை

வரிசைகெடாம லெடுமெனவோடி
வந்திளமைந்தர்கு னிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து

விறகிடைமூடி யழல்கொடுபோட
வெந்துவிழுந்துமு றிந்துநிணங்க
ளுருகியெலும்பு கருகியடங்கி
யோர்பிடிநீறுமி லாதவுடம்பை

நம்புமடியேனை யினியாளுமே.

முற்றிற்று.

தாயுமான சுவாமிகள்
வண்ணம்.

அருவென் பனவுமன்றி உருவென் பனவுமன்றி
அகமும் புறமுமன்றி முறைபிற மாது
குறியுங் குணமுமன்றி நிறைவுங் குறைவுமன்றி
மறையொன் றெனவிளம்ப விமலம தாகி
அசலம் பெறவுயர்ந்து விபுலம் பெறவளர்ந்து
சபலஞ் சபலமென்று ளறிவினர் காண
ஞானவெளியிடை மேவுமுபிராய்,
அனலொன் றிடவெரிந்து புகைமண் டிடுவதன்று
புனலொன் றிடவமிழ்ந்து மடிவில தூதை
சருவும் பொழுதுயர்ந்து சலனம் படுவவன்று
சமர்கொண் டழிவதன்றே ரியல்பின தாகும்
அவனென் பதுவுமன்றி அவளென் பதுவுமன்றி
அதுவென் பதுவுமன்றி யெழில்கொ டுலாவும்
ஆருநிலைபறி யாதபடியே,
இருளென் பதுவுமன்றி யொளியென் பதுவுமன்றி
எவையுந் தனுளடங்க வொருமுத லாகும்
உளதென் பதுவுமன்றி யிலதென் பதுவுமன்றி
உலகந் தொழவிருந்த வயன்முத லோர்கள்
எவருங் கவலைகொண்டு சமயங்களில் விழுந்து
சுழலும் பொழுதிரங்கி யருள்செயு மாறு
கூறரியசக மாயைபறவே,
எனதென் பதையிகழ்ந்த வறிவின் றிரளினின்று
மறிவொன் றெனவிளங்கு முபயம தாக
அறியுந் தரமுமன்று பிரியுந் தரமுமன்று
அசரஞ் சரமிரண்டி னொருபடி யாகி
எதுசந் ததநிறைந்த தெதுசிந் தனையிறந்த
தெதுமங் களசுபங்கொள் சுகவடி வாகும்
யாதுபரமதை நாடியறிநீ,

பருவங் குலவுகின்ற மடமங் கையர்தொடங்கு
கபடந் தனில்விழுந்து கெடுநினை வாகி
வலையின் புடைமறிந்த மறியென் றவசமுண்டு
வசனந் திரமுமின்றி யவரித ழூறல்
பருகுந் தொழிலிணங்கி யிரவும் பகலுமின்சொல்
பகரும் படிதுணிந்து குழலழ காக
மாலைவகைபல சூடியுடனே,

பதுமந் தனையிசைந்த முலையென் றதைபுகந்து
வரிவண் டெனவுழன்று கலிலென விடுஞ்
சிறுகிண் கிணிசிலம்பு புனைதண்டை கண்முழங்கும்
ஒலிநன் றெனமகிழ்ந்து செவிகொள நாசி
பசுமஞ் சளின்வியந்த மணமுந் திடமுகந்து
பவமிஞ் சிடவிறைஞ்சி வரிசையி னூடு
காலின்மிசைமுடி சூடிமயலாய்,

மருளுந் தெருளும்வந்து கதியென் பதைமறந்து
மதனன் சலதிபொங்க விரணம தான
அளிபுண் டனைவளைந்து விரல்கொண் டுறவளைந்து
சுரதஞ் சுகமிதென்று பரவச மாகி
மருவுந் தொழின்மிகுந்து தினமுந் தினமும்விஞ்சி
வளரும் பிறைகுறைந்த படிமதி சோர
வானரமதென மேனிதிரையாய்,

வயதும் படவெழுந்து பிணியுந் திமிதிமென்று
வரவுஞ் செயலழிந்து ளிருமலு மாகி
அனமுஞ் செலுதலின்றி விழியுஞ் சுடர்களின்று
முகமுங் களைகளின்று சரியென நாடி
மனையின் புறவிருந்த வினமுங் குலைகுலைந்து
கலகஞ் செயவிருண்ட யமன்வரும் வேளை
ஏதுதுணைபழி காரமனமே.

தாயுமான சுவாமிகள் வண்ணம்.
முற்றிற்று.

உ

கணபதி துணை

சிதம்பரத்துச்

சிற்றம்பலவாணர் வண்ணம்.

இராகம் - புன்னாகவராளி - தாளம் ஆதி.

தய்யத் தனன தத்த தனத்தந் தானன
தய்யத் தனன தத்த தனத்தந் தானன
தத்தந்தன தந்தந்தன
தத்தந்தன தத்தந்தன
தத்தந்தன தத்தந்தன
தத்தந்தனதான—தனதான தந்ததத்தந் தானனு.

வள்ளைக் குள்விழி வைத்த குறப்பெண் போல்வரு
தெய்வத் துரைய ளித்த துரைப்பெண் காதலர்
செப்பும்ப்ரண வத்தின்பொரு
ளைக்கண்டுசி ரக்கம்பமொ
டர்த்தஞ்சொல்மு கச்சந்த்ரனை
முத்தங்கொளும் வாயர்
வெள்ளித் தளிர்நிறத்த எருக்கம் பூமலர்
வில்வக் கிளையில் வைத்து முடிக்குந் தூயவர்
அக்கொன்றையும் இக்கொன்றையும்
அக்கங்கையும் இக்கங்கையும்
அத்திங்களும் இத்திங்களும்
வைக்குஞ்சடை யாளர்

வள்ளத் தினில்வ டித்த கருப்பஞ் சாறனை
யள்ளிக் கொடுகு டித்த தினிப்பென் றேதின
மெச்சுங்கிளி மெச்சுங்குயில்
மெச்சுங்கனி சொற்கண்டவர்
கற்கண்டிது கற்கண்டிது
கற்கண்டென வோது
சிவகாம சுந்தரிப்பெண் பாகனார்,

வல்லொத் தமுலை தைக்க மிதிக்கும் பாறையில்
வல்லிக் கொடிமு லைக்க மிதிக்கின் றோர்சத
பத்ரந்தரு புட்பம்பல
புட்பம்புனை தற்கங்கொரு
புட்பங்குறை யக்கண்டும
லர்க்கண்புனை பாதர்
பிள்ளைக் கறித னக்கு விருப்பம் போல்வரு
கள்ளப் பசித ணிக்க நினைத்தன் போடுசெய்
கைப்பொன்றுபு ளிப்பொன்றுது
வர்ப்பொன்றுரு சிப்பொன்றித
மெய்த்தொண்டர்சி றுத்தொண்டர்ச
மைக்கும்பரி பாகர்
வையத் தைவிலை பெற்ற பதக்கந் தான்விரி
பைவத் தவர வத்தி லமைக்கின் றோர்மணி
வச்ரங்கள்ப திக்கின்றக
டுக்கன்கள்வி ரற்கொண்டப
வித்ரங்களெ னக்கொண்டுதெ
ரிக்கும்பட நாகர்
விடநாக கங்கணத்தின் பூணினார்,

தெள்ளத் தெளிய வைத்த தமிழ்ச்செந் தேன்விலை
தையற் பறவை பெற்ற இதழ்ச்செந் தேனென

அச்சுந்தர ருக்கென்றதை
விற்குந்தொழில் கற்கின்றவர்
அப்பன்கவி புத்ரன்கவி
யைக்கொண்டவி னோதர்
கல்வித் தமிழு ரைக்க நடக்குஞ் சிறடி
பல்லக் கில்வரு தற்கு நினைக்கின் றோர்கண
கக்கிம்புரி யிற்கொம்புதிர்
முத்தஞ்சொரி ரத்தம்பவ
ளத்தின்ப்ரபை யைத்தந்திட
மைக்குன்றுரி வீரர்
தெவ்வர்க் குயர்பொ ருப்பை வளைக்கின் றோர்சிறு
கொவ்வைக் குள்நில வைப்பின் விளக்கின் றோரச
வெட்டுங்கரி யெட்டுங்கிரி
யெட்டுங்கட லெட்டும்புவி
யெட்டுந்திசை யெட்டும்பரி
வட்டம்புனை நேயர்
தலைமாலை யுந்தரிக்குந் தோளினர்,
செய்யிற் கயல்கு திக்க மணக்குஞ் சோலைகள்
செய்யிற் சொரிய விட்ட மதுக்கொண் டேவய
லுக்கும்பயி ருக்குங்கமு
குக்குங்கத லிக்குங்கட
லுக்கும்புய லுக்குந்தளிர்
விக்குந்தொழி லான
பள்ளப் பயலொ ருத்த னெதிர்த்தங் கேவரு
பள்ளச் சிறுபெணிட்ட கடைக்கண் பார்வையின்
மைக்கொண்டது டிக்கின்றதை
மச்சங்களெ னச்சென்றுபி
டிக்கும்பொழு திற்கண்டுவி
ளைக்குங்குறு மூரல்

செய்யிற் குமுத மொய்த்த மலர்ச்செங் தேனிறை
தில்லைப் பதித மைக்க நடிக்கின் றோர்கம
லத்தன்குலி சத்தன்துள
பத்தன்சய நத்தன்பணி
கர்த்தன்புலி நித்தம்பணு
சிற்றம்பல வாணர்
வரைமாத ருந்துதிக்குந் தோகையார்,

வெள்ளைத் துகிலு டுத்த சயிக்கந் தான்மத
னுள்ளுக் கொலுவி ருப்பை யுணர்த்துங் காணத
னைக்கண்டுக களிக்குங்கள
வைக்கண்டெ திர் நிற்கின்றவர்
வெட்கந்தனை யுட்கொண்டொரு
பக்கந்தனில் நாணி
மெள்ளத் தழுவ னைக்கு ளடுக்கின் றார்முலை
புல்லிக் கொள மடிக்கு ளிருக்கின் றாரொரு
மூத்தந்தர முத்தந்தர
முத்தங்கொள முத்தங்கொள
இத்தந்தம மூத்தும்புல
விப்பெண்பிழை தீர
வெள்ளிக் கதிர்கி ழக்கி லுதிக்குங் காணது
சொல்லப் பொழுதி லைக்க ணுறக்கம் போலவென்
மெய்க்கங்கணை தைக்கின்றதி
லக்கந்தபொ டிச்சிந்திட
வெச்சென்றெலு மிச்சம்பழ
மொற்றும்பொழு தாறும்
இருபேரு டம்பிளைப்புந் தீருமே,

வெவ்வெற் றிலைக டித்த சுருள்தந் தாள்நல
வெல்லத் திலுமெ னக்கு ருசிக்குங் காணதெ

னக்கென்றுமு னக்கென்றுமி
லைப்பங்குபி றித்துண்பதில்
தப்புண்டுபி ளப்புண்டுகி
டக்கின்றத னேக
முல்லைக் கணைவெ ளுத்த முருக்கம் பூவென
துள்ளத் தையொரு மிக்க உருக்குங் காண்மலர்
மைக்கொண்டைமு டித்துஞ்சா
சச்சிந்துப டித்தும்புழு
கைக்கொண்டுத ரித்துந்தழு
விக்கொண்டித மாக
மெள்ளத் துகிலை விட்டு நெகிழ்க்கின் றேனவர்
பையத் திருவி ளக்கை யவிக்கின் றூர்நவ
ரத்னங்கள்ப திக்குந்தொடை
சுற்றெங்குநி ரைக்கின்றதி
லெட்டொன்பது பத்தஞ்சுவி
ளக்கின்சுட ராக
இளமூரல் தந்தெனைப்பின் கூடுவார்,
கள்ளித் தனைகு டித்த மயக்கந் தானென
மெய்யிற் பரவ சத்தொ டணைக்கும் போதுட
லிற்சென்றுகிர் தைக்குந்துணை
மைக்கண்படை வெட்டுங்கரி
யிற்கொம்புகள் குத்துங்கல
விச்சண்டையி னூடு
கிள்ளுப் படுதெ னக்கை நெரிக்கின் றுள்வலு
கள்ளிக் குமிது மெத்த விருப்பங் காணய
னத்தும்பிப றக்குங்கள
பத்தும்பியெ திர்க்குங்குழ
விற்றும்பிம றைக்குங்கமு
குத்தும்பியி னோசை

கல்லுக் குருகு விக்கு மிதைக்கண் டாலொரு
பையற் குயிர்த ரிக்க வழக்குண் டோமத
னஸ்த்ரங்கள்து ளைக்கின்றதில்
ரத்தங்கள்து ளிக்கின்றதெ
னக்கண்டுப்ர மிக்குந்தில
தச்சிந்துர வேர்வை
முலையானை யுங்குளிக்குங் காணுமே,

கையத் தனைப டத்தை விரித்தங் கேயிடை
மையத் திலொரு சர்ப்பம் நடிக்குங் காணளி
னக்கண்கள்க றுக்குங்குவ
ளைக்கண்கள்சி வக்குங்குமு
தக்கண்கள்வெ ளுக்கும்புள
கக்கொங்கைக ளாடும்
எள்ளத் தனையி ருக்கு மிடைக்குஞ் சேதமொ
ரெள்ளத் தனையி ரக்க முலைக்குண் டோவென
அக்கண்கள்மு லைக்கண்பட
இக்கண்கள்மு ழுக்கண்பட
மைக்கண்கள ரைக்கண்பட
மெய்க்குந்தெரி யாது
கைவிட் டாசி லைக்கு ளிருக்கும் பாலலை
துள்ளித் திவலை சுற்றி யிறைக்கும் போதலர்
விற்கொண்டச மர்த்தன்கையி
லைக்கின்றத னைக்கண்டுர
திப்பெண்பனி நீர்ச்சொம்புதெ
ளிக்கும்புன லாகும்
அனுபோக மும்பருக்குந் தேடுமே.

முற்றிற்று.

திருவொற்றியூர்த்

தியாகராசர் வண்ணம்.

இராகம்-யமுனாகல்யாணி-தாளம்ஆதி.

தானனதந்தந் தனந்தத்தந்
தனத்தத்தா தனத்தானன
தானனதந்தந் தனத்தத்த தானதனதத்த
தனதானதான தனதானதான
தனதானதான தனதானதான
தனதனதானன தனனதானனு.

சீருல வுந்திங் களுங்கட்டுங்
கடுக்கைப்பூ வுமிக்கானப
கீரதி யுஞ்செஞ் சடைக்கற்றை மீதிலணிகர்த்தர்
சிறுபாலன்மீது பொருகாலனார்மெய்
சிதைவாகமோதி யுதைவீசுபாதர்
வானவர் நெஞ்சங் கலங்கிச்சஞ்
சலித்துக்கூ வுமப்போதைவி
லாலமு கந்துண் டயிர்ப்பிச்சை யீயுமொருசித்தர்
வடவாலநீழ லடியார்கடேற
மறைகூறியாளு முபதேசநாதர்
தேடிவ ருந்துங் குழந்தைக்கன்
புவைத்துக்காய் பசிக்காகிய பாலலேபொங்குங்
கடற்பட்ச மாகியருளத்தர்
தெளிவானசோதி யொளிதானரூத
திருநீறுமேவு திருமேனியாளர்
வடிவுடைநாயகி மருவுபாகனார்,
சேகர சந்த்ரன் குலுங்கக்கிண்
கிணிக்கொத்தா டமுத்தாடவ
னேகவி தந்துந் துமிச்சத்த மாடவிசைபெற்ற

செயதேவதேவ செயலோகநாத
வெனவேதகோடி துதிபாடியாட
வாசவ னுங்கஞ் சனுந்தைக்கும்
படைச்சக்ரா யுதத்தோனொடு
வானவ ருந்தங் கையிற்கொட்டி யாடவொருபக்க
மலர்வாழ்கல்யாணி யயிராணிவாணி
வருசோபனுதி யுடனுடமேவுந்
தேர்முசு குந்தன் பொருந்திக்கும்
பிடத்தப்பா மலிப்பூமியி
லேழுவி டங்கந் தனிற்சுற்றி யாடிமகிழிட்ட
திருநீழல்மீது க்ருபையாகிவாழ்வு
திறமானசேவை தருமடலாளர்
வரியரவாடிய நெடியபூணினர்,
நாரியர் கொஞ்சும் பெதும்பைச்சங்
கிலிக்குக்கா தலித்தேமய
லாகிவ ருஞ்சுந் தரர்க்கொக்க வோதியவளுக்கு
நலமார்கனுவி னிடையேகொளாணை
மகிழ்வாயிலேகொ ளெனவோதுபோது
மூதுரை யின்கொண் டிடுஞ்சத்யம்
புரட்டிப்போ னவர்க்கேவிழி
நாள்சில சென்றங் களித்திட்ட சீலர்தமிழ்கற்ற
முனிபார்வைகாண வுமையோடுகூடி
முதுசேவையீயு மணவாளலீலர்
நாளுமு ழங்கும் ப்ரசங்கச்செந்
தமிழ்க்குத்து தரைப்போலொரு
வேசித ரும்பெண் பிளக்கிச்சை பேசும்வசனத்தர்
நறைமாலைசூடி மறைமாலைபாடி
நகுமலையான சிரமாலையாளர்
மழுமறிமானில கவணிபாணியார்,

நாகரி கந்தங் கரம்பைச்செம்
பழத்தைத்தா ருெடித்தேவெடி
வாளைக ளெங்குங் குதிக்கச்செய் சாலிமுடியிட்டு
நடுமாதரார்க ணிழலாடவாட
நடைநீரிலோடு கயலோடியாட
வாசனை மண்டுஞ் சுகந்தச்சண்
பகத்துச்சோ லையிற்கோகில
மோகவ சந்தன் படைக்கொத்த காளமெனநித்தியம்
வழுவாதுகூவ வழகாயெநாளு
மணமாறிடாத மணிமாடவீதி
நாமக ளுஞ்சென் றுவந்திக்கும்
புதுப்பொற்று மரைப்போதுறை
பூமக ளுங்கொண் டிடப்பெற்ற தூயதிருவொற்றி
நகராளுமீசர் புகழ்சேருலாசர்
நழுவாதநேசர் தொழுத்யாகராசர்
மணிவரைமீதினி லிலகுமாதரீர்,

மாரனெ டுந்தண் டிறங்கிச்சண்
டையிட்டக்கால் முதற்பாளைய
மாகிவ ரும்பெண் களிற்சித்ர மேதனிமைநிற்கும்
வகையேதுவேறு மிகையேதுகூறு
மயிலேசொலாடு குயிலேமண்மீது
சூரில வம்பஞ் சினும்பொய்க்கும்
பதத்தைத்தா ழவைத்திரது
தானென தங்கந் தணைப்பிக்கு மேபினியுமக்கொர்
துணைகாணுநாணு மிணைகாணுமேனி
தொடவேணுமேசொ லிடவேணுநீரும்
வாருமி ருங்கண் டுசந்திக்கும்
படிக்குத்தா னடுத்தீரொரு
கோடித வந்தந் திடத்தக்க தோபரிமளிக்கு

மலர்வாயைநாடு மளிபோலநாடு
வருமேழைமயேன்மு னதுதூறல்போல
ஒருமொழியாகிலு மினிதுபேசுமே,
வாழையிளந்தண் டினுஞ்சட்டங்
கொழித்துக்கா மனுக்காலய
தோரண கம்பங் களுக்கொப்ப தாகியதுடைக்குள்
வளராதபோதெ னுயிர்தேறுமோகொ
னுலைவாயிலேறு மெழுகாமிவேளா
பாவிய னங்கன் செயுங்கொட்டங்
தனித்துத்தா பரிப்பீரினி
வேறொரு தஞ்சம் பெறபெற்றி லேனயன்வகுத்த
படிவாகியோவென் விழிவாசியோவு
முடல்வாசியோமெ லிடைபோனதேது
வாடிவ ணங்குந் துரும்புக்குஞ்
சிறுத்தைபோ மிடைக்கோவிரு
பாரத னங்கொண் டசைபிக்கி நீர்நடைநடக்கில்
மலர்போலுமேனி குழைவாமையோவென்
மடிமீதுவாரு முகசேவைதாரும்
இனியவர்பேரினில் வெகுளிவேணுமோ,
ஆரமு தின்செங் கரும்பைத்துண்
டமிட்டுக்கோ துவிட்டாடிய
பாகமு தும்பின் குமட்டச்சொல் வீருரைகொடுக்கி
லதுசேதமோகவ னுடல்வாதமோவெ
ளளவாகினுலு மிளகாததேது
வாயுமி ழுந்தம் பலங்கற்கண்
டதைச்சற்றே யளித்தால்வெகு
நாளள வுந்தொண் டுமெக்குசெய் வேனுமதுகிட்ட

வரவோகைலாகு தரவோபெணேச
மதியானவேலை யிடிலேதுமோச
மாரம ணிந்தங் கதம்பச்சந்
தனத்தைப்பூ சிவைத்தால்முலை
யானைம தன்பின் பிடிக்கொட்டு மோவதுபிடிக்க
வடியேனிதோகை நகமார்குடாரி
யதுபோடவேணு மிதமாகவேணும்
இதுபொழுதேயதை யறியலாகுமே,

ஆய்வளை யுந்தொங் கலுங்கொப்பும்
பதக்கச்சோ டுமுத்தாரமு
மேகலை யுஞ்சங் கிலிக்கொத்து மாலையுமுணிட்ட
வடையாளமாக வுடனுமோத
ரறியாமலேகை புணேவேனலாது
சோடுகி ளம்பும் பசும்பொற்குன்
றினுக்குக்கீ ழிடத்தேயொரு
நாகத லங்கண் டதனிற்கை யாடியொருமித்த
சுகமார்புளோசை யிருநாலுமாட
விழிவேல்களாட வெழில்வேர்வையாட
வாகமி ரண்டுங் குலுங்கப்பம்
பரத்தைப்போ லவொத்தாடிய
கேளியி லென்றன் சமர்த்தைக்கை பாருமனதுக்கு
ளதன்மேலென்வேலை வெளியாகுநீரு
மதைநாடநாட வெணேநாடுவீர்மெய்
அதுவுமிலாவிடின் மடலையீயுமே.

முற்றிற்று.

திருப்பூவணம்

புஷ்பவனநாதர் வண்ணம்.

இராகம் - நாதநாமக்கிரியை - தாளம் ஆதி.

தானதத்த தத்ததத்த தானதத்த தத்ததத்த
தானதத்த தத்ததத்த தானதத்த தத்ததத்த
தனத்தன தந்ததன தனத்தன தந்ததன
தனத்தன தந்ததன தனத்தன தந்ததன
தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தத்ததனதான
தனதான தனனதன தானனு.

காரணப்ர சித்தவத்து ஞானவித்து நித்தியக்ரு
பாசமுத்ர நிட்களப்ர காசரத்ன வற்புதப்பொன்
மறைப்பொருள் நம்புமடி யவர்க்கவர் சிந்தைபணி
விளக்குமெ யன்புதனில் முளைத்தெழு கின்றபரி
பூரணசு கோதயவி னோதநவ நீதவடி
வாகியம னோகரப ரப்ரமவிலாசர்,
ஆதிவிட்ணு வுக்குமிக்க நான்முகத்த வற்குமுற்றெப்
தாமலர்ப்ப தத்தர்சித்த ராகிமெச்சு புத்திபத்தி
மிகுத்தரு ளும்பொனனை மனைக்குளெ ழுந்தருளி
நிறைப்பொ னிறைந்ததிரு வுருக்கொள வன்றுரச
வாதவிளை யாடல்பணி யேயுலகெ லாமறிய
வேயிருக பேோலமுற கக்குறிகொள்நாதர்
காதலுற்ற ளித்தநற்பி தாவினத்தி யைக்குடத்தி
லேயெடுத்து வைத் ருட்செய் காசியைக்கு றித்துளிச்சை
சிறக்கவ ருந்தருமன் மகிழ்ச்சிபொ ருந்தியதி
*சயிக்கமெ ங்கமல ரெனத்திக முழ்படியி

---

* இங்குச் சரியான பாடங்கிடைக்கவில்லை.

ஞலிதுவ லோபெரிய காசியென வேதுதிசெய்
தாடிவரு போதினில யிக்யமருளீசர்,
மகமாயி யழகியமின் மேவுவோர்,
காதலித்து நித்தமுற்ற காசியிற்க தித்தபுட்ப
கானகத்தி னிற்றருக்கு மானிடப்ப ரப்புமற்றை
யனைத்துயி ரும்பெரிய கிருபைச்சிவ லிங்கவடி
வெனச்சொலி யன்பினொடு ப்ரதட்சணம் வந்தருண
சூரியனு மாமதியு மாகவெளி மீதுவழி
தான்விலகி யோடவருள் வைத்துறுவிசேடர்
பாதகத்தொ ழிற்செய்தக்கன் வேள்வியிற்ற கப்பனட்பி
ஞலடுத்து வட்டமிக்க பாவம்விட்டி டத்தலத்தில்
மலர்த்தரு வொன்றுகொடு பதித்துவி ரும்பியுமை
வளர்க்கவ ளர்ந்தருளும் விருட்சம தன்கணவள்
மாதபசு மேதகவொ ராயிரம தாம்வருட
நீடிவரு தேவவரு டத்தில்முயல்போது
கார்கொள்கற்ப கத்தருத்த னீழலிற்கி ரிப்பெண்மெச்ச
வேமுளைத்த கர்த்தர்செப்பு மூவர்சொற்ற மிழ்த்துதிக்க
விருப்பொடு வந்துவையை மணற்சிவ லிங்கமென
மனத்தெணி முன்புவட கரைக்கவர் நின்றுதமிழ்
பாடுபொழு தேயிடப மாமுதுகு சாயும்வகை
யேசெய்துமுன் மூவர்தெரி சிக்கமகிழ்நேசர்
நடராசர் கனகசபை போலவே,
நேரிருப்ப கத்தில்மிக்க கோள்கள்வக்கி ரிக்கவட்ட
மாநிலப்ப ரப்பினுக்குள் வான்மழைப்பி றப்பதற்கு
விடப்பனி ரண்டெனும் வருடக்கன பஞ்சமுனம்
வரத்தரை யின்பயிர்க ளிறக்கவோர் பண்பலரி
வோதனி லோர்தவளை வாழவத ஞலதுப
டாதுநெடு நாள்வரைய தற்கதுறவாகி
வாசமிக்கொர் புட்பநித்த மேவவிச்சை வைத்தெடுத்து
வான்மதிச்ச டைக்குள்வைக்க வேமிகப்ரி யத்தொடத்த

வளைக்கருள் கொண்டசுரர் குலத்தில்வி ளங்கவரம்
அளித்துமு குந்தன்முதல் வெருக்கொள்ச லந்தரன்ம
சாவசுர னுகவொரு நாமமியல் பாவருள
வேயவன்ம காசுரனை முற்றுவெகுதேவர்
சீர்மையைப் பகைத்தழித்து மால்வெளிக்கி ரிப்புறத்தில்
மேவமெத்த விர்த்தவிப்ரர் போலவுற்றெரு சக்கரத்தின்
உருப்புவி யின்கணெதிர் கிழித்ததை பென்றலையில்
எடுத்துவை யென்றுசொலி எதிர்த்தச லந்தரன
தாகமிரு கூறுசெய்து மாமலர்மு னியுமத
னூரிய பூவைநகர் முத்தியருளீசர்
நளாரச னுடையகரி சாடுவோர்,

சீடொளிப்ப சுற்குநித்த மாழியொற்றை யிட்டிசைத்த
தேரிழுத்தி மூத்திளைத்து வாவுபச்சை மெய்ப்பரிக்கு
வருத்தமி சைந்தவெகு தவிப்பொழு கின்றபடி
செழிப்பின் வளர்ந்துநிழல் கொடுத்தபசுந்தழைகள்
சோலையிடை பேகவிகள் பாயிபொழு தேறுகனி
யூறிரத மோடிவய லிற்பெருகிநாளு
மீறுநெற்க திர்க்குள்முத்து மூருநத்தி னத்தின்முத்தும்
சீரினிற்கு லிக்குமைக்க ணரிதழ்க்க ணிக்குள்முத்து
மிகப்ரபை கொண்டுமதி நிகர்ப்பது கண்டுதிகழ்
பகற்பொழு துங்குமுத மலர்ப்பொலி யுங்கனத
டாகமதி லேபுகுநல் மேதியது பால்மடியில்
வாளைநெடு வால்களடி பட்டிடவநேரம்
சீள்முலைச்சு ரப்புமிக்க பீர்விடக்க தித்தபுஷ்ப
வாவியைப்பெ ருக்கமெச்சு பாலினற்ச முத்ரமொக்கு
மகத்வமி குந்தசிவ தலத்தினில் முந்துதல
மெனச்சொலி நின்றுமகிழ் சகத்தினில் வந்தசிவ
லோகமிது வேயெனமெல் நான்மறைசொல் பூவை
மாநகரில் மேவிவளர் புஷ்பவனநாதர் [வள
மதிமேவு பொதியவரை மீதிலே.

மேருவெற்ப டுத்தசத்த சாகரப்ப ரப்பிலுற்ற
பூதலத்தி லிப்படிப்பெ ணேதுசொர்க்க முற்றிருக்கும்
ரதிப்பெணி லிந்த்ரன்மகள் துரைப்பெணி லந்தவுரு
வசிப்பெணில் ரம்பையெனு நயப்பெணில் வஞ்சியிவள்
தாமொருபெ ணுகுமதி ரூபமும்வை போகமும்வி
ஞோதமுமெய் தானெனநி னைத்தபொழு தேதமி
ழர்பதத்தை யிப்புவிக்குள் மீதுவைத்த லட்சணத்தி
ணிலத்து தித்தமெய்ப்பெ ணுமெனத்தி ரப்படுத்தி
யடுத்திட நின்றெனது தவப்பல னுங்கலையெ
னிடத்தினி லிங்குவர விடுத்தது வந்துகையி
லாகுதர வோமுலைக ளோபெரிய நூலினிடை
நோகுமினி நீர்நிலையி னிற்கிறதொ தானுது
மீறிவட்ட மிட்டசெப்பி னேடெதிர்த்த திக்ரமித்த
ஆனைமத்த கத்தையொத்த மார்புனிற்பு டைத்தகுத்து
முலைக்கொரு கும்பிடுமை விழிக்கொரு கும்பிடுபொ
னடிக்கொரு கும்பிடுபு னகைக்கொரு கும்பிடது
போடுவது பாருமொரு வாசகமே னேடுரைசெய்
தா லுமதில் வாயிலுள முத்துதிருமோசொல்
எனும்வேளை முறுவல்விளை யாடினுள்,
மேவுதற்கு வைத்தபட்ச மீதெனக்கு றிப்புணர்த்தி
னூரெனக்க ருத்தில்வைத்த நேரமெச்ச வெச்சரிக்கை
சொலச்சொல வென்கையது பிடித்துந டந்துவெகு
மகிழ்ச்சிய டைந்துமலர் பரப்பிய மஞ்சமிசை
யேறியொயி லாயொருகு மீதுமயல் சாய்பொழுது
தூவுபனி நீர்மெய்குளி ரக்குளிரவீசி
மேகமொத்த மைக்குழற்கை யால்வகுப்பெ டுத்துவைக்கு
மாலையைத்த ரித்துமிக்க பாகுவெற்றி லைச்சுருட்கள்
கொடுத்திட மென்றுகவு ளொதுக்கிய தம்பலமு
மெனக்கவ டந்துகரி சனத்தொடு சிந்தையதெ

லாமுனது மீதிலட சாமியிது வேளையினி
நீமருவ வாவெனவு ரைப்பள்முலைமூடு
மேல்ரவிக்கை யைக்கைதொட்டு நானெகிழ்த்த மட்டினிற்கு
பீரெனக்க தித்தபச்சை வாடையட்ட திக்குமுட்டி
மணத்திடும் விந்தையது சொலச்சர சங்களிசை
மிருத்தப தங்கள்வெகு கலித்துறை சிந்துபல
தாழிசைகள் தாயின்மக ளேசல்மடல் கோவைவண
மேசொலுவள் கூவுகுயி லுக்குநிகராகி
அனுராக மதனரதி போலவே,

வாரணத்த னத்தைவைத்தென் மார்பினிற்ப தித்திருக்கி
வாள்விழிப்ப கட்டின்மெய்க்கு ளாவியைப்ப றிப்பள்கட்டி
நெருக்குவள் செங்கைகொடு செருக்குவ ளன்புசொலி
யுருக்குவ ளின்பமயல் பெருக்குவள் கொஞ்சிமடி
மேல்விழுவள் நீபுருஷ வேசைபரி யாசமல
டாநிசம டாவெனவ டிக்கடிவிணுண
மாயுரைப்பள் மெத்தமுத்து மோகனச்சி றுக்கிதிட்ட
மாயொருக்க ணித்துமிக்க கால்களைப்பி னிப்பினிச்செ
விதழ்க்கடி யென்பளிரு துடைக்குணி மிண்டுவளை
ணிடுப்பின கங்கள்பட வழுத்துவள் கும்பமுலை
தான்விரலி னுனெருடி நீபிடிவி டாமல்மயல்
மீறுதட டாவெனம யக்குவள்கிரீடி
மாரபொக்கி ஷத்தினுட்கை போடமெய்ச்சி னுக்கமிச்ச
மாகிவெட்க முற்றுளத்தி னுணமக்க ணத்தில்விட்டு
முடுக்குவள் வஞ்சிமலர் முகத்தொரு சந்த்ரகலை
பிறக்கம லர்ந்துகரி கரத்தைவி ரைந்துசெய
டாவெனவு மேசெயவு மேதமிகு பீரெனவு
மேவுவள நேரமெனை முத்தமிடுவாள்பின்
அதிமோக தாகமிக வாடுவாள்,

வாலிபப்பெ ணிற்றுரைப்பெ ணோர்கணத்தி னிற்றியக்க
சோபமுற்றும் விட்டுவிட்டு மேல்கொளச்சோ லிக்கரைப்ப
ளணைக்குள ணைந்தபொழு தரைக்குளி ருந்தமுகிழ்
விரித்திட வந்துதமி குழுக்குமெ னுங்குமிழி
மேல்வருப்ர வாகமென வாகிமிக வேகியிரு
காலிணையு ளோடுமறி பட்டதுநிலாம
லோடவப்பு றத்தினுக்குண் மாமகிழ்ச்சி யைக்கருத்து
ளேயடக்கி வைத்துமைக்க ணண்முலைக்க ணைப்பசப்பி
யிடுப்பு மிகுந்துகடு கடுக்குது சந்துதுடை
வலிக்குதெ ழுந்திரென வுறுக்குவள் வம்பிகன
மோடிபணு வாள்பினுட னேமருவி யோர்விசைச
லாபமொடு காரியந டத்துமுபசாரி
வார்கடற்ச கத்தினுக்கு ணீசமர்த்த னுத்தரிக்க
நாளொருத்தி நற்பெணுக்கு ளேசமர்த்தி கெட்டிகெட்டி
யெனச்சொலி யென்றனிரு கதுப்பினை மென்றுமத
மெழுப்புவள் பின்புதன தனத்தன வென்றுபரி
லீலைபுரி வாளிவள்சை யோகசுக மாரறிவர்
கோபியர்க ளோடுபுணர் கிருஷ்ணரறிவார்முன்
மறவாது வனிதையனு போகமே.

முற்றிற்று.

திருவையாற்றுச்

செம்பொற்சோதியர் வண்ணம்.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தனனதன தாத்ததந்த தனனதன தாத்ததந்த
தனனதன தாத்ததந்த தனனதன தாந்ததந்த
தந்தத்தா தனனதான தந்தத்தா தனனதான
தந்தத்தா தனனதான தந்தத்தா தனனதான
தனனதத்த தானதன தந்தனு.

கடகரியின் பேறபிறந்த இளமையிரி யாக்குழந்தை
மதகளிறு போற்றவழ்ந்து மயில்முதுகில் வீற்றிருந்த
தண்டைக்கால் மடியிலேறு மின்பத்தே னளிகளேறு
தும்பைப்பூ முடியிலேறு கொன்றைத்தார் புனையுமார்பர்
அமுதமொரு பாற்பிதுங்க நிலவுமொரு பார்பிதுங்க
விழுகவொரு பார்பிதுங்க மதியினுடல் தேய்த்தநம்பர்
கஞ்சத்தான் முதன்மையான பஞ்சைத்தே வதைகள்சேர
அஞ்சித்தா னுயிர்விடாமல் நஞ்சைத்தா னுகரும்வாயர்
கனியினெதிர் போய்த்துரந்து குயிலையரு நாக்கரிந்து
கிளியையொரு மூக்கறிந்த மழலைமொழி வாய்க்கரும்பு
நம்பித்தா ளிணையின்மீது கும்பிட்டோர் தொலைவிலாத
சம்பத்தா லினிதுவாழ அன்பைத்தா னுதவுதாயர்
அறம்வளர்த்த தாயரொரு பங்கினர்,

கலைமுனிவர் வீட்டில்வந்து கலசமுலை யார்க்கணங்க
கலகம்வெகு வாய்ப்பிறந்து கலைகள்பறி போய்த்துவண்டு
கொண்டைக்கார் சரியும்வேலை கும்பஸ்தா பிதமதான
கொங்கைத்தா மரையைமூட அந்தப்போ தரையைமூட
நெடியபெரு மூச்சுவந்து முலையைவெளி யாக்கியங்க
முழுதும்வெளி யாக்கநின்று முகிழ்முறுவல் பூத்தபெண்கள்

அந்திப்போ தனையமேனி சந்திப்போ தரிபடாது
பஞ்சிற்றீ யெனவுநாடு நெஞ்சிற்றீ யுடல்பொருது
கயல்பொருக ணீர்த்ததும்பி இளமுலையின் மேற்சொரிந்து
மலையருவி போற்பறந்து நதிபெருகு நீச்சில்வெண்ட
ரங்கச்சே லைகள்மினார்கள் தங்கட்கோர் கலைகளாக
அந்தக்கா ணகமுலாவு நம்பிட்சா டனவினோதர்
உலகிலொப் பில்லாதவொளி தங்கினோர்,

அடல்முரச மார்ப்படங்க விருதுகுயில் போய்ப்பதுங்க
நிழல்மதிவி ணாட்டொதுங்க வளர்கிளிகள் பேச்சொடுங்க
மன்றற்றே மலயமீது தென்றற்றேர் பதறியோட
வம்புப்போர் புரியநாடும் அம்புப்போர் மலரிலேமுன்
விரைவிலொரு பூப்பறந்து வருமுன்விழி தீப்பறந்து
மதனனுடல் தூட்பறந்து ரதிமனது போய்ப்பறிந்து
சந்தச்சே றளையுமேனி மண்பட்டே புரளுநீர்மை
கண்பெற்றோர் தரிபடார்கள் பெண்பெற்றோர் பரிபடார்கள்
அதிரநெடு மூச்சிலண்ட முகடுமொரு கீற்றுவிண்ட
தமரார்விழி தோற்றவெம்பி யழுதகுரல் கேட்டிரங்கி
வஞ்சிக்கா தரவுபேசி நெஞ்சுக்கோர் கவலைதீர
வஞ்சித்தோ னையுமெணாமல் முன்செத்தோ னுயிரைமீள
அருள்கொடுக்க வோடிவரு மன்பினார்,

அளிகள்பயில் தோப்பில்வந்த எருமைமுலை பாற்சுரந்து
மடுவினிடை பூத்தகஞ்ச மகளிர்முலை போற்குவிந்து
வண்டுக்கால் உழுதபோது கெண்டித்தா ரைகளைநேர்சொல்
மண்டித்தேன் வழியநாரை கெண்டைக்கா யலையநீடு
கமுகினிடை பாக்குதிர்ந்து கதலிகுலை சீப்பொடிந்து
கிழிபடு பலாப்பழங்கள் மிதிபடநி லாப்பரந்த
திங்கட்போல் ஒளிகுலாவு சங்கத்தே தரளராசி
சிந்திப்போய் நிலவுவீசு மிந்தக்கா விரிநனீரில்

அலைபெருகு மாற்றிலொன்று நறைபெருகு மாற்றிலொன்று
அமுதநிறை யாற்றிலொன்று வருதிருவை யாற்றில்வந்த
செம்பொற்று மரைமினுளர் செம்பொற்று மரைகள்சூடு
செம்பொற்று ளிணையரான செம்பொற்சோ தியரெனீசர்
முடிஇதுடுத்த சாரல்வரை வஞ்சியார்,

படருமிரு தாட்சிலம்பு கலகலென ஆர்ப்பெழும்ப
வரிவளைகள் மேற்புலம்ப விழியிலொரு காட்சிதந்து
மஞ்சத்தே வருவர்நாணி யந்தத்து ணருகுசாய்வர்
முந்திச்சே லையைவிடாம லென்கைக்கே தருமவேளை
எனதுமடி மேற்சரிந்து குழைவர்முடி பூச்சரங்கள்
புனைவரொரு பாக்கையென்று தருவர்சுருள் மாற்றிமென்று
துஞ்சற்றே தருவர்கோவை யுஞ்சற்றே வெளுறரேகை
முன்சற்றே பதியுமாகி லென்கெட்டே னிதெனவூடல்
பயனும்வெகு தூர்த்தனென்பர் அருகில்வர மாட்டமென்பர்
மிளகுபதம் வாய்க்குமுன்பு கடுகுபொடி யாச்சுதென்று
வந்தித்தே னெனையெணுமல் நிந்தித்தார் மனதினோடு
புண்பட்டே னலதுபாவி பண்பட்டா ளிலையிதேது
குடிகெடுத்த கோபமது கொஞ்சமோ,

பணைமுலைகள் பார்த்தகண்கள் பசியகுழல் பார்த்திருந்த
புலவியத ளுற்றெளிந்து மனதிலுற வாய்க்கலந்து
முன்சற்றே முனியிலேது பொன்சுட்டா றினதுபோல
வின்சொற்பே சினதுசீனி யுங்கைப்பாய் விடுமெனுணை
யமிர்தநிலை பார்த்தறிந்து நகநுனிகள் போய்ப்பதிந்த
சமயமொரு வேட்கைவந்து தழுவியவர் சேர்த்தணைந்து
பந்தைப்போல் முலையும்வாடை மஞ்சட்பூ சினதுவாச
மென்கத்தூ ரியமுமாமு டம்புக்கோர் புளகமாமெய்
பளபளென மேற்றுலங்கு மரசிலையில் மேற்கிடந்த
புனைதுகிலை நீக்கவந்த பொழுதிலொரு கூச்சம்வந்து

செங்கைத்தா மரையில்மூடு தங்கக்கா சணையதோர்ப
ணஞ்சற்றே தெரியவேபி ணங்கித்தா னினிதுமேவு
கலவிவித்தை யாயிரம் விதங்களே,

உடல்புளக மாய்க்கலந்த திருவுமொரு மார்க்கமம்பொ
னரவிலொரு கூத்துமெண்பு ளிசையிலொரு பாட்டுநங்கை
கொங்கைத்தா ளமும்விடாத செங்கைத்தா டனமுமாண
சங்கைக்கோ பரதலீலை மங்கைக்கோர் சுரதலீலை
இதெனவிளை யாட்டணங்கி னருமையிள நீர்க்குலுங்கி
லொடியுமிடை சூட்சமென்று குமுறுமிகு தாட்சதங்கை
கண்டத்தோர் தரளமாலை சண்டைக்கா யளவுகாணும்
விண்டைப்பா லுதிரவேர்வை சிந்திற்றே வெனவும்நாடும்
உபயதன மேற்பதிந்த இருகைமுடி மேற்குவிந்த
தொருகையதை நீக்கவந்த பொழுதில்மன தேக்கம்வந்து
மிஞ்சிப்பே சுவதுபாதி யஞ்சிப்பே சுவதுபாதி
கெஞ்சிப்பே சுவதுபாதி ரஞ்சிப்போ சொலவொணாது
கணைதொடுத்த மாரனொடு சண்டையே,

உடையுமயல் போய்ப்புரண்டு மொழிகள்விழி போற்புரண்டு
விழிகள்குழை மேற்புரண்டு முகமதியின் மேற்புரண்டு
பைம்பொற்றே டசையநீடு கம்பிக்கா தசையவோர்நி
தம்பத்தே ரசையமாலை யின்பொற்றே துதிரவாச
மலரளக மேற்குலைந்து விரைவிலயல் போய்த்திரும்பி
மயில்விசிறி போற்குளிர்ந்து வதனமதி வேர்ப்படங்க
அன்றிற்போ லிடைவிடாம லென்கைக்கே முலைவிடாமல்
மின்கைக்கே யணைவிடாம லின்பத்தே னிதழ்விடாமல்
ஒருவர்மலர் போற்கிடந்து மொருவரளி போற்கிடந்து
முலைமெழுகு போற்கரைந்து மதனசல மூற்றிருந்து
முந்திப்போ கமுமலாது பிந்திப்போ கமுமலாது
சந்திப்பா கியசயோக மெந்தக்கா லமுமறாமல்
எணைபுருக்கு மேசரச வின்பமே.

முற்றிற்று.

இராஜமன்னார் கோயிற்

செண்டலங்காரப்

பெருமாள் வண்ணம்.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தானனதந்தனனா-தன தானதந்தனனா-தன
தானதந்தன தானதந்தன தானதந்தன தந்ததந்தான
தனதன தன்னானதனா.

வேலைநெடுந்திரையா-கிய பாய்விரிந்ததிலே-நிமி
ராயிரம்பட நாகபஞ்சணை மீதுறங்கிய நன்பரந்தாமர்
சீர்பெறுபஞ்சவரே-விய காரியஞ்சொலவே-துரி
யோதனன்சபை யூடுசென்றிரு கால்வருந்தந டந்திடுதூதர்
வீறுசெயுங்கனகா-சுர னாவிபொன்றிடவே-கையி
னாலறைந்திடு தூணில்வந்தரி யேறெனும்படி நின்றசங்க்ராமர்
இலகிய பொன்னாடைபுனைவார்,

வீசுதடங்கையிலே-சுட ராழிசங்குடையார்-குரு
கூரில்நஞ்சட கோபர்முன்சொன பாடலின்பமு கந்திடுங்காதர்
ராவணகும்பகனா-தியர் போய்மடிந்திடவே-உயர்
ஞாலமுன்பிண மாய்நிறைந்தபி னாணிறங்கிநி மிர்ந்ததின்சாபர்
மேதினியெங்கணுமோ-ரடி யாலளந்தருள்வார்-தனி
மூலமென்றொரு காலியம்பிய வாரணந்தனை யஞ்சலென்றாளும்
இணையெழுத வொண்ணாதவடிவார்,

ஆலைநெடுஞ்சிலையா-ளிக லாமிடுந்தெய்வமோ-கினி
யாகிவந்தும காதவஞ்செய்த பேர்மயங்கந டந்தசிங்காரர்
மார்புநிறைந்துகுலா-வுது ழாயலங்கலினா-ரொரு
காளிகன்பட மீதுநின்றுல கேழுமஞ்சந டஞ்செயும்பாதர்

ஆதியொடந்தமிலா-வெளி யாயகண்டிதமா-பணு
வாகிநின்றுச ராசரம்பல வாகியெங்குநி றைந்தபண்பாளர்
அனுபவ மென்னுவியணைவார்,

ஆழிநெடும்புன லூ-டுவ ரால்நிறைந்திடுபூ-கத
மாரிசிந்திநி லாவிழுங்கிய போதுகொண்டலின் மண்டலஞ்சாய
மோதுதல்பண்டொருநாள்-நவ நீதமுண்டபிரான்-நல
சோதைகண்டுதன் மோர்கடைந்திடு கோல்கொடன்றடி யுந்து
பண்பாகும்

ஆதிவிளங்குறுமால்-பிர தானமங்கையில்வா-ழலர்
மேலுமங்கைம ணாளரெங்களையாளவந்தருள் செண்டலங்காரர்
அழகிய மன்னூர் தம்வரைவாய்,

பாலைவனந்தனிலே-ஒரு பாதகன்பிறகே-மகள்
போனவிந்திர சாலமெந்தவு பாயமொன்றும றிந்திலன்பாவி
ஆர்செய்தவஞ்சனையோ-வினையால்விளைந்ததுவோ-அயல்
வீடுகண்டறி யாள்கலந்தவ னோடிணங்கவு டந்தையிங்கேது
பாரமறிந்தவளோ-சொல்பி ராயமொன்பதலோ-மல
டாயிருந்தவெ னேழைகும்பியில்நீலிவந்துபி றந்ததென்பாவம்
வெயிலெழு மந்நேரமெளிதோ,

பாதைசுடுஞ்சுடுமே-மகள் பாதமென்படுமோ-படு
பாதிமுந்தியில் மீதுநின்றங னேதியங்கிவி ழுந்திடும்பேசு
பூவைபுமிங்குளதே-கிளி தானுமங்கிலையே-அலை
வாய்வரும்பொழு தோடிவந்துவி டாய்தணிந்திட வென்சொ
லுங்கூதை

பாவைபிரிந்தனளே-பழி யேநினைந்தனளே-கதை
யோகொடுங்கலி யோகுழந்தையி லேவிளைந்தது நன்றுவெங்
காமம்

அரிகரி பெண்ணுசைகொடிதே,

மாலையிலுஞ்சிறுகா-லையு மூழ்கியன்புடனே-தரை
மீதிலுண்டவ ளாயருந்தவ மேபுரிந்துபி றந்தநன்பேறு
தாயைமறந்தனளே-அய லாரைநம்பினளே-மத
யானையின்பிடி யானைகண்டக னுவியம்பின ளந்தியம்போது
வாழ்மனையொன்றினிலே-கிளை யாளர்தங்கள்முனே-கவி
யாணமுஞ்செய்தொ ராசைகண்டில னுலிரண்டுபி றந்ததுண்
டோபெண்
ஒருமக ளொண்ணுதுபெறவே,

வாசல்கடந்தளவே-வெகு தூரம்வந்தவள்போ-னம
தூரில்வந்தில மோவெனென்றறி யாமல்நின்றுபு லம்புமென்
பேதை
காடுகள்வெந்ததிலே-கம ராய்விரிந்திடுமே-யதி
லேபதுங்கிய மாசுணம்புரி போலவெந்துசு ருண்டவெங்கானில்
மாதுநடந்தனளே-யென காரணந்தெய்வமே-இனி
யாரைநொந்துப்ர யோசனந்தனி யேகிடந்துபு லம்புமென்பிரா
ணன்
விதியிது கன்மானுபவமே.

முற்றிற்று.

இராமேச்சுரத்து

இராமநாயகர் வண்ணம்.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தனதனதத்தன தானதந்தன தனதனதத்தன தானதந்தன
தனனதனனதன தனனதனனதன
தனனதனனதன தானதானன
தானதன தந்ததன தானனா.

பகவதிநித்யகல் யாணிசங்கரி
பயிரவிநிக்ரக காளியந்தரி
உலகுகிடுகிடென மயிடன்முடிமின்மிசை
நடனமிடுகவுரி நாகபூஷணி
சரஸ்வதிலட்சுமி தேவிகும்பிடு
மிருசரணத்திரி சூலிகண்டகி
பதரியலகைசில கதரியிணையுகிரி
லுதறியெறியுமொரு பூதவாகினி
பருவதவர்த்தனி யாதிசுந்தரி
அநுபவியுத்தமி நாககங்கணி
அருணவெயிலொழுகு தருணவடிவழகி
கருணைதிருவுருவ மானகாரணி
தேவியொரு பங்கிலுறை நாதனார்.

பகடுநடத்திய காலனெஞ்சக
முறியவுதைத்திடு பாதபங்கயா
மதனுமவனுடைய சிலையும்வடிவழகும்
எரியஅழல்விசிறு பாலலோசனர்
அமுதுபிறக்குமு னேகருங்கடல்
வயிறுகிழித்தெழும் ஆலமுண்டவர்
சனகர்முதலினர்கள் பரவவடதருவி
னிழலிலுறையுமொரு ஞானதேசிகர்

பவளவிதழ்க்குள்வெண் மூரல்கொண்டுமுன்
அடையலர்முப்புரம் நீறுகண்டவர்
உபயகடநடுவில் முழுகியழகியச
னிதியில்வருபவர்செய் பாவமோசனர்
வாசமிகு கொன்றைமலர் மாலையார்,

மகதர்துலுக்கர்ம ராடர்சிங்களர்
குகுதர்களொட்டியகர் னுடர்கொங்கணர்
வடுகர்குடகரொடு நிடதர்மகுடமுடி
வருடுபதயுகள ராஜசேகரி
எழுபதுலட்சது பாகிமண்டிய
புகையிலதிப்ரமை யால்மயங்கிய
அடையலர்கொடிமதில் இடிபடிநடவிய
த்ரிமததடகராட யானையானெழில்
வனருகலட்சுமி தேவிதங்கிய
இரணியகர்ப்பசு தாகரன்செய
நரபதிகசபதி செயபதிதனபதி
ரவிகுலபதிரகு நாதபூபதி
சேதுபதி நம்புமிரு தாளினர்,

வனசமலர்ப்பொலி சீதையென்றிடு
திருமகளைக்கொடு போமிலங்கையில்
அரசனவனுடைய தலைமகனடுமக
னிளையமகனெடுபல் கோடிசேனைகள்
முழுதுமறுத்தெதி ராடுகும்பக
றனையும்வதைத்துவி பீஷணன்றனை
அரசுநிறுவியொரு சனகிசிறையைவிட
மகரசலதிதனில் ஆதிநாளையில்
மலைகொடணைத்தருள் சேதுபந்தன
ரகுபதியர்ச்சனை யால்விளங்கிய

பொழுதில்மனமுருகி அதிகவரமுதவு
கருணைபொழிவரத ராமநாயகர்
வாழ்வுபெறு செம்பொன்வரை மீதிலே.

விகசிதபுட்பவி தானமஞ்சமும்
நறுமலர்மெத்தையும் நூறுபொன்பெறு
தழுவணையுமொழுகு மிலகுமணவரையில்
வருவள்கலபமயில் போலுலாவுவள்
சரிகைரவிக்கையு ளேபிதுங்கிய
முலைகளிலெத்தனை சோபையங்கவர்
சவளிநடுவிலொளி பளபளெனவொளிரும்
வயிரவிலையதொரு நூறுகோடிபொன்
விசிறிசுழற்றிய கோலமுன்கையில்
வளையல்மயக்குது பாவிசிந்தையை
இடையழகிலுமவ ளுடையழகிலுமிரு
தொடையழகிலுமயல் மீறுதேமனம்
வேறுமொரு பெண்களையு நாடுமோ,

விரகமெனக்கமை யாமல்முந்தியை
வலியவிழுத்துமு னேசிணுங்கியென்
மடியில்விழுவள்புனை சலவையுரிவளதில்
வெளிகள்தெரியுமிகு ரோமரேகைகள்
கவுளைநெரிக்கையி லேரசம்பெறு
மிதழையருத்துவ ணீயிதங்கொடு
முலையின்முலையைபெல நெருடுநெருடுமென
மழலைமொழியிடைவி டாதுபேசுவள்
விடுவிடுசற்றென மேலெழும்புவள்
உபரிதொடுத்தந னேயிறங்குவள்
அமளிமிசைதுவள்வ ளிடையிலிடையிலொரு
கலகமிடுவளுற வாவள்மீளவும்
மோகமது கண்டதிலை ராமனே,

முகமதியிற்குரு வேர்வரும்பிட
அழகுசனித்தசெய் வீகமென்சொல்க
உடலமுழுதும்வளர் புளகமெழமிகவும்
எனதுசெவியுள்நுனி நாவில்நீவுவர்
கடிதடமத்தியி னூடிருந்திடு
மணியையசைக்கையி லேகனிந்ததில்
அமிர்தமிளகிவர வுலேயிலிடுமெழுகி
னுருகியுருகிவெகு தாகமீறுவள்
முடியில்வலக்கைப வீரெனும்பொழு
துடலிலெனக்குசி லீரெனும்படி
இடதுகையில்முதுகு தடவியெனவலிய
வலியமருவுவள்பி னேதுதாமதம்
மாமதன் சண்டைவெகு தூளியே,

மொகுமொகெனத்தொனி நீடுமென்குரல்
கமுகுலெழுப்புவள் பாததண்டைகள்
ஒலிகள்கதரியிட வளைகள்சிதறமிகு
வுனதமயிரின்முடி பூசலாடிட
கடினபுணர்ச்சியி லேமகிழ்ந்திரு
தொடையைமலர்த்துவள் போகம்வந்தது
சமயமிதுசமய முனதுவசமெனுயிர்
பதனமெனமொழிவள் நாணவேளையில்
முலேயைமுகக்குமு னேபதிந்தது
பிடரிநகக்குறி கோடிபுண்டிரு
மனதுமகிழ்வுபெற ரதியுமதனுமென
மருவுகலவிசரி போகமாய்வரு
காமரச நெஞ்சில்மற வாததே.

முற்றிற்று.

——

அண்ணுமலையார்

வண்ணம்.

---

* எழுதரிதேன்றல்.

இராகம் - புன்னுகவராளி - தாளம் - ஆதி.

தனத்தான தனனதன தனத்தான தனனதன
தனத்தான தனனதன தந்ததனனு
தனனதனதான தானதனனு

சிலைக்காம னுடலெரிய விழித்தாடல் புரிபரமர்
செருக்கோல நமதுயிரை யுண்டசரனுர்
மலர்ப்பாவை வருசகல கலைப்பாவை தொழுப்சிய
மலைப்பாவை கவுரியொரு பங்கிலுறைவார்
சினத்தாலு மிகவுமெதிர் விழித்தாலு முனிவினெடு
சிரித்தாலும் அழல்வடிவு கொண்டபரனுர்
அரவுகுடியேறு நீடுகுழையார்.

திருக்கோயில் திருவதிகை திருச்சேய்ஞல் திருமருகல்
திருத்தோணி திருவரதை வஞ்சிபனையூர்
திருச்சேறை தருமபுர மறைக்காடு திருமயிலை
திருக்கோவல் தினைநகரம் அன்பில்கடவூர்

---

* மடலேறப்படுவோர் தான் காதலித்த கன்னியின் உருவத்தினை எழுதிக்கொண்டு எருக்கம்பூ, எலும்புமாலைகளைசூடி அன்றே! ஏறுவது. கன்னியின் அவயவ மெழுதலரிதாகிய தற்கு இரங்கிக்கூறியது.

"களிசேர் களிற்றுக் கழனெடு மாறன் கடையல்வென்ற
தெளிசே ரொளிமுத்த வெண்குடை மன்னன்தென் னுடனை
கிளிசேர் மொழியுங் கருங்குழ ஞற்றமுங் கேட்பினைய [யாள்
வெளிதே யெழுத வெழுதிப்பின் னுர்க வெழின்மடலே."

மாறன் கோவை.

திருக்காவை பொதியமலை கழிப்பாலை கயிலைமலை
தெளிச்சேரி யிடைமருது தஞ்சைவழுவூர்
சுழியல்புனவாயில் கூடலுறைவார்,

புலித்தோலி னுடையழகர் பலிக்கேகு நடையழகர்
பொடிப்பூசு நுதலழகர் செங்கைமழுவார்
நெருப்பாறு வரும்வழியில் மயிர்ப்பால மெனுமனதில்
நினைப்பார்கள் வினைகளையும் எங்கள்பரனூர்
புயத்தோடு நெடியவரை யெடுத்தானை வெகுளியொடு
புடைத்தானை யுரியையணி கொண்டதிறலார்
குமுதமலர்மாலை சூடுசடையார்,

புகைப்போல எழுபடல் முகிற்கூட மிடறிவிழு
பொழிற்கூடு வளர்கமுகு நின்றநிலையே
குருத்தோடு மிடறொடிய முடத்தாழை விரியவெதிர்
குதித்தோடி வருகயல்கள் துன்றுவயல்சூழ்
புகழ்ச்சோண கிரியிறைவர் விடைப்பாகர் அமரர்விழி
புதைத்தேபி னிருகைதொழும் அங்கிவடிவார்
தடவரையெனுவி போலுமயிலார்,

மலைப்பார மெனவளரு முலைப்பார மெழுதிடினும்
வளத்தோடு பெருகுணமி ரண்டும்வருமோ
விருப்பான கரியகுழல் இருட்போல வெழுதிடினு
மிகுத்தேறு வரியளிமு ரன்றுவருமோ
மதர்ப்பான விணைவிழிகள் வடுப்போல வெழுதிடினும்
மடப்பார்வை யிருகுழைக டந்துவருமோ
குழையெழுதி லூசலாடிவருமோ,

மலர்த்தாளை வனசமலர் தனைப்போல வெழுதிடினும்
மலர்ப்பாய லனமென நடந்துவருமே

உறுப்பான திலகநுதல் விதுப்போல வெழுதிடினும்
உவப்பான குறுவியர்வ ரும்பிவருமோ
வரிக்கோல மிடறுகமு கிணைப்போல வெழுதிடினும்
மரப்பாவை யுருகுமிசை யின்பம்வருமோ
விரலெழுதில்வீணை பேசவருமோ,

இலைப்பாதி யிழையுமென நுசுப்பாக வெழுதிடினு
மிதைப்போல வொசிவொடுத ளர்ந்துவருமோ
வனப்பேறு திகிரியென மணித்தோள்க ளெழுதிடினு
மயிர்க்கால்கள் புளகிதமெ றிந்துவருமோ
இதழ்க்கோவை யதனைமிகு சிவப்பாக வெழுதிடினு
மிளைப்பான பொழுதமுது வந்துதருமோ
உகிரெழுதில்மீது லாவிவருமோ,

எழுத்தோடு முறுவல்முலை நகைக்காக வெழுதிடினும்
எதிர்த்தாடு புலவிநகை இங்குவருமோ
மதிப்பான வுடலையொரு கொடிப்போல வெழுதிடினும்
மயிற்சாய லொருசிறிது தங்கிவருமோ
எடுத்தாடு படமெனஅல் குலைப்பேணி யெழுதிடினும்
இதத்தோடு மமுதுகுதி கொண்டுவருமோ
கிழியெழுதிலேது லாபமுரையீர்.

முற்றிற்று.

மூவரையன் வண்ணம்.

இராகம் - புன்னகவராளி - தாளம் - ஆதி.

தனதன தத்த தான தானன தனத்த தந்த
தனதன தத்த தான தானன தனத்த தந்த
தனனதந்த தந்த தான தனனதந்த தந்த தான
தனனதந்த தந்த தான தனனதந்த தனதன
தனதாந்த தனதான தாத்தன.

ஒளிவரு பச்சை மாலை வாடின தொடைக்கி சைந்த
புதுவயல் வைத்த கோதை நாயகி கருத் துகந்து
விழியுகந்து தந்து தேற லருளுகந்த இன்சொல் வாணி
தமிழுவந்து பண்ட சோதை முலையுகந்த தயவினன்
எவரையுந டத்தி னுலு மாதரவு பெற்றி ணங்கி
யவரவர் மட்டி லேத ராதர நடத்து நண்பன்
இடையில்வந் தடைந்து ளோரு முதலினங் கலந்து ளோரு
மிருமருங் கிருந்து வாழ நடுவிருந்த நிலைமையான்
வறுமைய டைத்த வீடு பாலொடுபு சிக்கி லந்த
மகிமைந மக்கு வீறு வீறெனவ ளர்த்த கொண்டல்
வெடுவெடென் றவன்சொ லோசை கனவிலும்பி றந்தி டாது
வெகுரசம் பிறந்த வாயி னகைபுரிந்த லளிதவான்
இகல்வேந்தர் தொழுசேனை மூர்க்கவான்,

விரிகடல் வட்ட மேழு தீவும திரத்து ரங்க
வடகன வட்ட மேறி வாளர சரைத்து றந்து
வினையரண் பிடுங்கி நாக முடியலைந் துலைந்து போக
வலமிடந் திரும்பி யாடு பவுரிகொண்ட லகிரி யான்
மலையுமெ திர்த்த வேளை யோர்மசக மொக்கு மென்று
மனதுபெ லத்த வீர சாதனைசெ லுத்து சிங்கம்
வடகலிங்கர் வங்கர் சீனர் குகுதர்கொங் கர்கங் கர்சோர்
வகைவிளங் கவந்த ராசர் தொகைவிளங்கு கொலுவினன்

விசையம கட்கு மாலி னுமலர்கள் மட்ட லர்ந்த
தளவுகொ டுத்த மாலை தோளிலிடு முக்ர துங்கன்
விசிறுதென்றல் மன்றல் வீசு கவரிநின்ற லம்ப நூறு
பரிசைசென்று கண்ட ராசர் பணியவந்த சிவிகையான்
இசைதாங்கு கவிமாலை சூட்டினேன்,

எளியவ ரைப்பிர தாப ராசரென நட்ட தன்றி
வலியவ ரைப்பிர சாத ராயுழல விட்ட வென்றி
எழில்சிலம்பு நின்று லாவு விருதுதண்டை யொன்று பாத
சிறுசதங்கை யொன்று தாய ரணியுமுந்தி யணியுமால்
மதுரமி குந்த பாகு சாரமத னிற்சி றந்த
பொருளறி நற்பிர தாப நூல்பல தமிழ்ப்ர சங்கி
மணிதரென்றி ருந்த லோப குடிதிறம்பு வஞ்சர் காண
உலகமெங்க ணுந்தி யாக பிரபலஞ்செய் புகழினன்
எழுதரி யிட்ட நாள்வெ ளேடெழுது சட்ட மிஞ்சி
நவரச மிட்ட வோலை மேல்வரியி லிட்ட நண்ப
னினியநன் குணஞ்சு பால பரிசனங்க ளின்ப மேரு
விணைநலங் கனந்த ராசு நிறையினின்ற பெருமையான்
மகிழ்சாந்த மணவாள னுட்கொள்வோன்,

இரசித சித்ர கூட மாளிகை முகப்ப டர்ந்த
பகலவ னெற்றை யாழி தோரண மறுத்த கம்ப
மிடைதவழ்ந்து பஞ்ச பாணி குடையிதென் றியம்ப வாணி
விரவுவந்த திங்கள் போல விடியவந்த நிலவுகால்
வரியளி தொட்டி லாடு தாமரை முகப்பில் வந்து
சுரிமுக நெற்றி மீது நாளுமடி பட்டு நொந்து
வயவுகொண்ட பண்டி யோசை குமுகுமென்று தொண்டை
வளர்கிடந்த வம்பி யேறி மடைதிறந்த நெடியகால் [யூதி
இருகரையு முத்து வீசு வீரநக ரைப்பு ரந்த
திருமலை முத்து வீர மூவரையன் மைத்து னன்பொ

ணிமயமுங்கு லுங்க வீறு புயமணிந் திடுங்கு மார
ணிணையில்ரங்க னெங்க ளான தமயனெங்கள் புணரியான்
வளமோங்கு களைவேள்வி நாட்டிலே,

ஒளிவிடு முத்த னையபெ ணேயுனது பற்சி வந்த
பவளமு மொத்தி ராத னையுனித ழுக்கு வஞ்ச
முடையமிஞ்சு நஞ்ச னையக ணினியமென் கரும்ப னையசொ
லழகுதந்த மந்த காச முயிரையுண்ட நமனனைய
சிறுபிறை யொப்ப னையசெ வாணுதல் மணத்த கந்த
பொடியிடு செப்ப னையபொ னாபரண மிட்ட கொங்கை
செறிசெறிந்த விந்தை யான சொருகுகொண்டை மஞ்ச னையி
ணிசைமுழங்கு மெண்பு ளோசை குமுறுசங்க மிடறனைய
யுதரத லத்தின் மீறு ரோமவரை சிற்றெ றும்பு
சரிரமெ ழுக்க னையு ளீரமய மற்ற வம்பி
யுனதுநெஞ் சிரும்ப னையமி ணிடைதுவண்ட கொம்ப னையமெ
லடிகள்பஞ்சு பஞ்சனைய யென் மனதுபந்த மெழுகனைய
சுகிவேண்டி லெணைவார மாக்கனைய,

உடையை நெகிழ்க்க வோக னாடிநிழ லொத்தி லங்கு
மரவப டத்தை மூட வோதுடி துடிக்கு தென்கை
உபயமென் குறங்கின் மார நபிநயந்தொ டங்க வோமெல்
விரலரும்பு கொண்டு நாபி மலர்வளைந்து குடையவோ
செவிமட லுக்கு ளேயெ னாவி னுனி யிட்ட ளைந்து
புளகமெ ழுப்ப வோப லாலிருக துப்பை மென்று
திரள்பழங் கனிந்த கோவை யிதழ்விளிம்பை யுண்க வோ
லணியிலங் கனங்க ராச கலைநகங்கொ டெழுதவோ [சொ
உடலை யிறுக்க வோசெ வேடலைக ளொத்த கொங்கை
யொருகு கொடுக்க வோக ணேயுன்முக முத்த ரும்பி
யொழுகுதென்று கொஞ்ச வோவு னுடன்மகிழ்ந்து கெஞ்ச
வோ சொல்
புளகிதஞ்செ றிந்து மேவ கரிகரஞ்செய் தணைய வோ
துடையேந்தி மடிமீதி லேற்றவோ,

களினமு கத்தின் மோக சேவையு மதற்கி சைந்த
கொடையும ளிக்கு மேயுன் மேனிபத றித்தி யங்கி
நடுவுதொங்கல் விண்ட பூவை யளகபந்தி சிந்து மேபொன்
வளைநெருங்கி முன்கை நீல வளையுடைந்து சிதறுமே
முழுமணி ரத்ன மாலை சினமணி யுட்க லந்து
சுவடும றைக்கு மேம லாடுகுழை யந்தி லங்கு
முலைமுகங் குலுங்கு மேசெ மதிமுகங் குலங்கு மேமெ
யழகுகந்த குந்த ளோலை குழையிறங்கி யுருளுமே
கடுமணி பத்தி பாய ஆடுமொரு சுட்டி தொங்கல்
அகலிய கொப்பு மாடு மேயது மறைக்கி ணங்கி
நடனமிஞ்சு கொஞ்சு காலி விருசிலம் பலம்பு மேக
முபரியின்ப மின்று காண விழியனந்த மமையுமே
மிகமூண்ட மனதாசை மூட்டுமே.

கயனம டைத்து மூடி நாசியி லுயிர்ப்பி ணங்கி
விரலைம டித்து வாயி லூதியுறு மிச்சி ணுங்கி
நயமுடன் பிணங்கி லீலை புரியுமந் தரங்க மோடி
நினையநொந்து நொந்து வாட இழைமருங்குல் குழையுமே
படபடென வுச்சி மீதி லேசட சடச்ச டென்று
விழுபதி னெட்டு மேள தாடன மலிந்து பொங்க
திகழ்பழங் குழம்பி யாடு கனதனம்பி துங்கி மார்பி
லுதையநெஞ்சு நைந்து சோர உதையில்மிஞ்சி நகரவே
இருதலை யொத்த காம மார்சல மடைத்தி றந்து
நெடுகவி ரித்த பாயி லேறியணை யிற்ப ரந்து
நறுமணங் கலந்த போதில் உயிரிரண்டு மொன்ற தாக
பரமவின்பம் வந்து மூடு கலவியின்ப மினிதுகாண்
விதிதோன்றி லனுபோகம் வாய்க்குமே.

முற்றிற்று.

இராமநாதபுர சமஸ்தானம்
ஸ்ரீலஸ்ரீ பாஸ்கர சேதுபதி அவர்களின்
முன்னோர்களாகிய

ஸ்ரீரகுநாத சேதுபதியவர்கள்மீது

அருமைத்திரிபு வண்ணம்.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தானனதந்தனா-தன-தானனதந்தனா-தன
தானதானனதானா-தன-தானதானனதானா தன
தானதானன தனன தானா.

நாடியசண்டனையே-யடல் கூர்ப்ரசண்டனையே-பிறை
நாறுமாசடையானையே-விடை
யேறுமாசடையானையே-உமை
மாதொருபங்கனையே-வர ராமலிங்கனையே-தொழு
மானபாகன்வில்வாசியா-னெழில்
வேனில்வேளினும்வாசியான்-விரை
நாண்மலர்நங்கையினான்-இகல் வேலினங்கையினான்-முது
ஞானநூலெழுதேடினான்-விற
லானதோர்புகழ்தேடினான்
தானையானணி கனக தானையான்,

நானிலநன்குடையான்-மதி போலுநன்குடையான்-இசை
நாவலோர்தமிழ்மாலையான்-வெயில்
போழுனேதருமாலையா-னிரு
மாநிதிதண்டிகையான்-ஒரு கோடிதண்டிகையான்-அணி
வாலசூரியசோதியான்-வரு
மேலுளோர்குறைசோதியான்-வரி
நாகணையன்றுடையான்-அற மேயியன்றுடையான்-மறை
நாலுமேயவதானியான்-மதி யூகியானப்ரதானியான்-வள
மேவுமாவிலை துயிலை மேவுமால்,

சேடனெனுங்கலைபா-னொரு பேரையுங்கலைபா-னுயர்
தேகபூஷணபூதியா-னனு
போகவானனுபூதியான்-மகு
டேசரையஞ்சலியா-னொரு போதிலுஞ்சலியா-னுல
கேழில்வேதியராசியான்-மிக
வாழ்துலாமெனும்ராசியான்-நிதி
தேடிநிலம்புதையா-னடு போரினிலம்புதையான்-மொழி
தீயரோடுறவாடிலா-னலர் தூயவாண்முகம்வாடிலா-னடல்
மாரவேள்பர வியகு மாரவேள்,

சிறுமிபங்கயமே-சில நீடுபங்கயமே-யுடை
தேன்றுமதகோடியே-நினை
நீள்வரால்சதகோடியே-யெதிர்
பாய்வதுகொண்டலையே-விளை யாடல்கொண்டலையே-பொரு
பான்மையான்மழைமாரியே-பெய
மேன்மையானநென்மாரியே-விளை
தேவைவருந்தளவாய்-திரு மால்பசுந்தளவாய்-குல
தீபனும்ரகுநாதனென-ப்ர
தாபனும்ரகுநாதபூ-பதி
வாழியேயிறை வரவர் வாழியே,

ஓடிவரும்படவே-தகு மோதினம்படவே-கரை
யோடமேவியசீனியே-பகை
பாடமேவியசீனியே-செய
சோதியடம்புகளே-சொலு வாரடம்புகளே-செறி
சோலையானபுனுகமே-சர
சாலையானதெனுகமே-யரு
கோலமடங்குருகே-யுள மேயிரங்குருகே-திரை
பூரும்வேலையிலாமையே-துகில்
சோரும்வேலையிலாமையே-பல
தோகையேகொடிது கொடி தோகையே,

ஓசைவலம்புரியே-மிகு சேவலம்புரியே-முகி
லூடுபோனதெனுணலே-துகி
லோடுபோனதெனுணலே-திரை
மோதுதடங்கரையே-கரை யாதகொண்கரையே-கன
மோனசாதகனுரையே-யழை
போனபாதகனுரையே-நறை
பூறுகரும்பனையே-விலை காய்கரும்பனையே-மன
மோயுமோசிறுகூனியே-பிறை
காயுமோயுடல்கூனியே-மணல்
ஓலமேபுரி வதுக லோலமே,

கோடிசஞ்சலமே-தணி யாதுசஞ்சலமே-மிடை
கோரையோடுமனீரலே-பல
தாரையோடுமெனீரலே-கமழ்
தாழையில்வண்டினமே-தரி யாதுவண்டினமே-கன
சாரலோவிடுகானலே-பணி
நீரலோசுடுகானலே-துணை
கூடியமஞ்சனமே-குளி ராதுமஞ்சனமே-விரை
கூடவேபுனைபாசமே-நிதி
தேடவேயவர்பாசமே-மணி
யாரமேகன லுமலை யாரமே.

கோதறுநஞ்சுறவே-குயில் கூவுநஞ்சுறவே-கலி
கோபமாதவசேதுவே-பிர
தாபமாதவசேதுவே-புனல்
மூழ்குதிமிங்கலமே-துணை யேதுமிங்கிலமே-வரு
மூடலாமுழுகாவியே-பெறு
நாடெலாமுழுகாவியே-கயல்
கூறுமலங்கினமே-மதி தாமலங்கினமே-யனு
கூலமாகியமேகமே-முனம்
வேலனார்சொலுமேகமே-வரி
வாளையேமிகவு மெலி வாளையே.

சென்னைப் புரசை அட்டாவதானம்

சபாபதிமுதலியாரவர்கள் இயற்றிய

வண்ணம்.

ஆண்கலை.

இராகம் - புன்னுகவராளி - தாளம் - ஆதி.

தத்ததத்தந் தனந்தானன தானனதந்தந் தனந்தானன
தத்ததத்தந் தனந்தானன தானனதந்தந் தனந்தானன
தனந்தத்தன தனந்தத்தன
தனந்தத்தன தனந்தத்தன
தனந்தத்தன தனந்தத்தன தானுதனதான
தத்தான தந்ததன தனதனு.

நித்தியத்தின் சுகங்கூர்தரு பேரெழில்தங்குந் துலங்காரண
வுட்பொருட்பண் புறுங்காரண வானவனென்றன் பவந்தீர்தர
வருந்தற்பர னெனுஞ்சிற்குண
தரன்சொற்பொரு ணிறைந்துற்றவ
னபங்கத்துரு வரன்பற்பல ஜீவாதரவாதி
சித்தியெட்டின் திறந்தோர்பல மாதவரிந்த்ரன் பணிந்தோதரு
விற்கலைச்சுந் தரந்தானுபர் சேகரசந்த்ரன் பொலந்தாதவிழ்
அரும்பித்தளை யவிழ்ந்தெத்திசை
யினுஞ்சுற்றிய வயங்கப்பரி
மளம்பெற்றிடு கரந்தைத்தொடை மாதாரணிமார்பர்
நிட்களக்கொந் தளங்காதணி மாதரியண்டந் தருப்பார்வதி
பொற்குவட்டின் கணந்தாவிப மேருசுதந்த்ரன்பெறுங்கோமளை
பொருந்துத்தம வறங்கட்கொரு
துசங்கட்டிய வருஞ்சிற்பரை
படந்தைப்பிடி முனம்பெற்றிடு பானுேதயசோதி
கற்றோர் வணங்கருளி னுருவினன்,

நிட்டைமுற்றும் பயன்றேறுத போதனர்சங்கம் பரிந்தேயுறை
கற்பகத்தின் றடஞ்சோலைகள் சூழ்விளங்குங் கடம்பாடவி
யடைந்தச்சம ணவெங்கட்கரி
யினம்பற்றற வடங்கக்கழு
விடுஞ்சொற்றமிழ் மடங்கற்பதி ஞானாகரநாதன்
கத்துநற்சங் கினங்கூடிய பாயலைபொங்கும் பெருஞ்சாகர
விப்புவிக்கண் டினம்பாடிய பாவலரென்றுந் திரங்காமலே
இடும்பைத்துயர் அதன்கட்டுகள்
விடும்பற்றொடு களைந்திட்டருள்
செயும்பக்ஷம ருவுஞ்சத்திய தேவாதிபர்தேவன் [ழிருள்
னெக்குவிட்டெடங் கணாம்போயுழல் தானவர்துன்றுங் கணஞ்சூ
பட்டெழத்தன்செழுந்தூவிகள் கோதியவண்டங்குலைந்தேதநிலை
யசங்கக்கடல் தருஞ்சிற்றொலி
யொடுங்கற்பமு டிவின்கற்சனை
யழுங்கக்குரன் முழங்கிப்படர் காலாயுதமான
செற்றார் நடுங்கவுயர் கொடியினான்,

முத்திவித்தென் றிடுங்காவல னானசுகுந்தன் புயங்காசல
வத்தனித்தன் சிலம்போலிடு சீதளமென்பங் கயம்போலொளி
யிலங்கிக்கனி வுடன்கற்பனை
கடந்துட்கசி வுறும்பத்தர்க
ளிரங்கித்துதி செயும்பொற்பத தேஜோமயரூபன் [ள்
குத்திரத்தின்கடும்போர்புரி கோரமிகுந்துன்றிடுஞ்சேனைகொ
அத்திரத்திண் கொடுஞ்சூரரை யாதியனந்தன் படஞ்சேர்தொ
மடங்கத்திசை தொறுந்தத்திய [கை
விலங்கற்றிர ளதுங்குப்புற
நெடுங்கைக்கரி கலங்கத்தெறும் வாகார்வடிவேலன்
முக்கியத்தைந் தருந்தாருவி னீழலியங்கும் பெருந்தேவர்கள்
எத்திறத்தும் ஜெபங்கூறபி ராபதமுன்றந் திடுந்தேவிபல்

சதங்கைக்கழ லிரங்கிக்கல
கலென்றிட்டிட வொதுங்கற்புத
கருங்கட்குயி லெனும்பொற்குற மானூர்மணவாளன்
மட்டார் செழுங்குவளை யணியலான்,

முக்கடக்குஞ் சரங்காதல்கொள் சோதரனம்பன் வரந்தானுயர்
சத்துவத்தின் பெரும்பூரண ஆறுமுகன்பண் டயன்காவலை
விடும்பெற்றியி னிணங்கித்தயை
புரிந்திட்டிடு குகன்சித்ரமு
ருகன்சொற்சர வணந்தத்துவ மேலார்குருசாமி
வித்தகத்தின் பரிந்தாழியி னீரைவிழுங்குந் திடந்தானிறை
மெய்த்தவத்தின் றனங்கோலிய வாடகும்பந் தருங்கோமுனி
மனம்பெட்புற விதங்கிப்பிர
ணவங்கற்றறி நலன்றய்த்திட
வெழுஞ்சித்திர மிகும்பச்செனு மாயூரவிநோதன்
முச்சகத்துஞ்சிறந்தேயெழு கார்முகிலொன்றும் பசுங்காவிடை
மொய்த்தமுத்தின் றடஞ்சேர்வுறு தேனவிழ்கஞ்சங் களின்
அரம்பைக்கனி யுடைந்தெப்புடை [பாய்கயல்
யிலுங்கட்டிய வரம்பிற்புக
வெழும்பித்தனி யிறங்கிக்களி மாறுவளநீடும்
மைக்கார் தொடும்பழனி மலையின்வாய்.

ஆண்கலை முற்றிற்று.

யாழ்ப்பாணம்

தாமோதரபிள்ளை வண்ணம்.

பெண்கலை.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தத்ததத்தந் தனந்தானன தானனதந்தந் தனந்தானன
தத்ததத்தந் தனந்தானன தானனதந்தந் தனந்தானன
தனந்தத்தன தனந்தத்தன
தனந்தத்தன தனந்தத்தன
தனந்தத்தன தனந்தத்தன தானுதனதான
தத்தான தந்ததன தனதனு.

தத்துவத்தின் பதந்தேர்முனி வோரெதிர்கெஞ்சும் பொலஞ்
[சீறடி
பத்மினிப்பெண் செழுங்கோகில வாணியிளம்பெண் கள்சிந்தா
யிதஞ்சொற்பயில் வசந்தக்குயில் [மணி
மதன்கைச்சிலை ப்ரசங்கக்கலை
பெதும்பைப்பிடி நறும்பொற்கொடி மாமோகனமாது
சித்திரத்தின் சுசஞ்சேர்வைக லாமதியின்பந் தருங்காமிது
ரைத்தனப்பெண் சுனஞ்சேரயி ராணிபசும்பொன் குடம்போ
குலுங்கக்கொடி நலங்கப்பணி [ன்முலை
யிலங்கத்தொடி துலங்கப்பிடி
நடந்துப்பரி கையின்பத்தியின் மேல்மாடிகணு்டி
தைத்திருக்குஞ் செழுஞ்சாளர வாசலில்வந்தங் கெதிர்ந்தாள்
[விர
கக்குறிப்புந் தெரிந்தாளோர்ச லாமிடநெஞ்சங் கனிந்தேனகை
அரும்புற்றனள் விரும்பிப்பினை
திரும்பித்தய வுடன்பட்சமு
மகிழ்ந்தொப்புர வுடன்தொட்டனள் நானேதனதாக
விஸ்தார முஞ்சிறிது புகலுவாள்,

சப்பிரத்தின் பிணைந்தாடிநி லாமணிமஞ்சந் தடம்பூவணை
வைத்துமெச்சும் பதம்பாடினள் சேர்வையிடுஞ்சந் தனம்பூசுவ
ளிடும்பொட்டழ கிலுங்கட்டழ
கிலுந்தொட்டவ ரையுந்திட்டுவள்
புயங்குத்துமு லையுந்தைத்திட நீடாசையினோடு
கட்டிமுத்தந் தரும்போதவள் வாயதரந்தம் பலஞ்சாறொரு
பத்துலட்சம் பெறுங்கூர்விழி லோகமயங்குஞ் சுகந்தாதிகள்
குரும்பைத்தன முரண்டச்சிறு
அரம்பைத்துடை யருஞ்சிற்றிடை
நிதம்பத்தினும் நகம்பற்குறி தாளாதடசாமி
சர்க்கரைப்பந் தலின்றேன்மழை யானதிதென்றும் புகன்றாளர
வப்பணத்தின் கொழுங்கூரயில் நாறுனிகொண்டுங் குடைந்தே
உடம்பைக்கிறு கிறென்றக்கண [ணதில்
மயங்கிக்களை தெளிந்தெத்திற
மருந்தெத்தனை விதங்கற்றனை நீயேகளவாணி
அத்தான் மயங்கிவரு தணையடா,

மெத்தைமிச்சம் புரண்டாளணி சேலைகளைந்தங் கெறிந்தாளெ
[திர்
வெட்கமுற்றுந் திரும்பாளதை மூடுவள்பின்தெந் தனம்பேசுவள்
பிணங்கிப்பிற கிணங்கித்தலை
கவிழ்ந்துச்சில விளம்பிப்பினை
குனிந்தெத்தனை விதங்கற்றனள் நாணவிதமாக
உச்சியிற்றங் கரம்போடப வீரெனவுங்குங் குமஞ்சேர்முலை
யைப்பிடிக்குஞ்சுகங்காணச பாசெனவுங்கண்டுகொண்டாடுவள்
திரும்பிப்பார பரென்றுக்கரி
கரந்தொட்டொரு தரஞ்சுற்றுவள்
மதம்பட்டணை துவண்டத்ததி பூவார்கொடிபோலும்

மெத்தையிற்சென் றுறங்காள்பரி யாசமும்வம்பும் கலந்தேசிந
யத்தொழிற்குங் கசங்காளொரு ராமுழுதும்பந் துகந்தாடுவள்
சொலுங்கொக்கோக மதன்சக்கர
முயன்றுத்தொழப் ரசண்டத்தொழில்
மதங்கட்டுவ ளுடன்தட்டுவள் வாதாடுவள்மீள
மட்டேறு கொந்தளக நெகிழவே,

வித்தையிற்கம் பநின்றுடுவள் கோல்விசைகொண்டுஞ் சுழன் [றேயுட
ரித்தொழிற்கண் டதுண்டோவிது நூதனமென்றும் புரண் [டேறுவள்
கருஞ்சொற்குயில் கனிந்தக்குர
னெருங்கத்தனி மடந்தைப்புற
வெனும்புட்குரல் கனைந்தொற்றுவள் நானாவிதமாக
மைக்கடைக்கண் சிவந்தேகையில் வால்வளையுஞ்செஞ் சிலம் [போலிட
நெற்றியிற்சிந் தூரந்தேய்வுற வேர்வைகளெங்குங் கரைந்தோ [டவு
மரும்பொத்தனள் சுரும்பொத்தனள்
வலஞ்சுற்றின னிடஞ்சுற்றினள்
ததும்பிக்குமி ளிபொங்கித்துயில் நீராய்சமபோகம்
செய்க்கனிப்பைந் தடந்தாமரை வாசனையெங்குங் கலந்தேபிர
திக்குமிக்கிங் கிசைந்தேர்திரு நாளுமதன்சம் பிரம்போலிதை
சுகந்தக்கவு மனம்புத்தியு
மிசைந்தொத்திரு வரும்பட்சமோ
டணைந்தொப்புர வுடன்பெற்றிடு காமாகரலீலை
சற்றேறநி னைந்திடவு முருகுதே.

பெண்கலை முற்றிற்று.

வண்ணம்.

பெண்கலை.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தனதனனதானதான தனதனனதானதான
தனதனனதானதான தனதனனதானதான
தந்தனதானதான தந்தனதானதான
தந்தனதானதான தந்தனதானதான
தன்னனனு தனத்த தனதனதனு.

பருவரதியேசலாப சரசமயிலேவிணுடர்
அமிர்தவடிவேவைபோக ரசகுளிகையேபெணேப்ர
சங்கமடையுன்மேனி தங்கமடைவில்வேள்க
ளங்கமடையிதேவி லங்கமடைகுணுளி
மருவின்மணமேகணேயெ னருமையறியாதவேதே
கபடமலடைபொயாணை யிடுவதலடைபொருது
வஞ்சமடையிதேபிர பஞ்சமடைசையோக
புஞ்சமடையுன்வீடு தஞ்சமடையலாது
பரகதியிலேதுலாப முனதுகனிவாயினூறல்
பருகிலதுகாசியாடி வருவதிலுமாவிசேஷம்
வங்கணமாகவேம ணங்கமழ்பாயல்மீதில்
இங்கிதலீலையேபு ரிந்திடநாணமேவு
பெண்ணரசே மயக்க வசமலவமட,

பவளவிதழோகபோலம் அழகுமுகமோவெனுவி
பருகும்விழியோவெணீறுநுதலினெளியோபொன்மேனி
மஞ்சளின்வாசமோசெ றிந்திடுதேமலோநெ
ருங்கியமார்பிலேது ரும்பொடுநூல்புகாது
கலசமுலையோமெய்ரோம உதரதலமோவின்மார
னரண்மனைவிலாசமான அரவபடமோகனுடி

இங்கொருபாவிநான றிந்தறியாமலேபு
லம்பியபாபதோஷ முன்றனேயேவிடாது
பழிவருமடீசனேனு னடிமையெனையாளவேணு
மிதுசமயமாகுநாளை யினியுடல்பொருதுகாணு
மென்றுசொல்போதிலேந டந்துகைலாகுமீதி
லென்ப்ரமைதீரமேவு பஞ்சணைமீதுகூடி
நன்னயமாய் மடிக்கு ளவள்விழுகுவாள்,

ஒருசுருளைமாறியீவ ளொருசுருள்தன்வாயிேனாடு
பருகியுமிழ்வாளென்வாயி லதுவமிர்தபானமாகு
மங்களநாதவோசை யெண்குரல்காதிலேநு
ழைந்திடுபோதுதேவ துந்துமிபோலவாகு
முடுகியெதிர்தாடனுதி சடசடெனரோமராசி
புளகம்வருபோதுகாம சனதவெறியேறியாடு
பம்பரமாகவேசு ழன்றுகைகால்விடாது
சந்தொடுசேரவேபு ணர்ந்துகொள்வாள்ப்ரயாசி
ஒழுகுதனில்வீழ்வள்சேலை தலைகுலையும்வேளைசோர
னுரிகுவள்பளாசபாசு முலைநெருடுமேலுமேலும்
விந்தையதாகவேசு கந்தெரியாமல்மாது
பந்தையலீலையேய றிந்தவனாரடாசொல்
என்னமுனே யணைத் திறுகியிகலுவாள்,

உபரிரதிகேளிகூடி முகமதியில்வேர்வையாட
முதுகுகுழலூசலாட முடிமலர்கள்பாதிசோர
மந்தரமேருவான கொங்கைகளாடவாட
பந்துகள்போலவேமி குந்துசெய்வாள்பொனேலே
பளபளெனமேனிவேர்வை சலசலெனவேசவாது
கமகமெனவேகபோகம் வெதுவெதெனவேமுனுள்செய்
இங்கிதலீலையோகு ழைந்தபொன்மேனியோசி
வந்தகண்வேல்களோச வுந்தரமோடியோவென்

உயிர்பருகும்வாலைமோக ரதிமதனகேளிதேவ
பதவியனுசாரபோக இகபரநல்வாழ்வுதோணும்
வஞ்சியுநானுமாயி ரங்கலிகாலமாய்ம
கிழ்ந்தணையாமலேயி ருந்ததுகாமமாயம்
எண்ணியபோ துருக்கு மனதொருமையே.

பெண்கலை முற்றிற்று.

வண்ணம்.

பெண்கலை.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தானதந்தனனா-தன தானதந்தனனா-தன
தானதந்தன தானதந்தன
தானதந்தன தந்தனதான
தானான தானதன தானனா.

பூவருந்திருவே-மத னார்தொழுங்குருவே-அனு
போகபஞ்சம தாகிவந்திலை
ேனார்மயங்கவ ருங்கிளியேயெ
னாசையின்கனியே-யுயிர் போலவுந்தனியே-யெனை
யாளவந்தக ணேயணங்கர
சேயிணங்குவ தென்றுவில்வேள்செய்
பூசல்கண்டனையே-மதி சூறைகொண்டனையே-அனு
பூதிதந்தடி யேனையுங்குடி
யூழியங்கொள நன்றிதுவேளை
யேனோபெ ணேமனதி லாதமே.

போகரஞ்சகியே-அணி யாயவஞ்சகியே-பழி
போடுவன்பழி காரியென்றனை
யாவருஞ்சொல நிந்தனையேறும்
லாடசங்கிலிபோல்-மயல் மூளவும்புலிபோல்-முலை
நாடுமஞ்சளின் வாடைசந்தன
வாடையென்றலை மண்டையினூடு
போயுறுஞ்சுதடி-வசை யூரறிஞ்சுதடி-அடி
போடிமீண்டுசெ யாதுபஞ்சணை
மீதுவந்துக லந்தணையாமல்
ஏதேது தாமசமி தாகுமோ.

கோபமென்சொலடீ-மனம் நீடுவன்கலடீ-வலு
கோரமுன்பெரு மோகம்வந்துநெ
யாய்நிரம்பவே னெஞ்சதுகாமன்
ஓமகுண்டமடீ-யிது தானோர்கண்டமடீ-யினி
யூமைகண்டக னுவிநெஞ்சுட
னேபுலம்ப விடும்படியேது
கூடல்கண்டிலையே-மொழி யேதும்விண்டிலையே-ஒரு
கோடிகும்பிடு போடநின்றுப
ராமுகஞ்செய்கு றும்பெனபாவம்
நானோவி டேனுபர்சை யோகமே,

கோவையின்கனிவாய்-மொழி கூறுநன்கனிவாய்-அனு
கூலமொன்றுமி லாமலிந்திர
சாலவிந்தை செயுந்தொழிலேனுன்
வீடுதஞ்சமடீ-யிது வேப்ரபஞ்சமடீ-சன
மேநிறைந்தவு ளேரிலிங்கிது
கேள்வியுண்டுயர் வெம்பலைகோடி
கோடியுண்டடியோ-தெரு வீதியுண்டடியோ-புனை
கோலமென்புவி பூதிகண்டவர்
பேயனென்றிட மன்றினிலேறி
‡ நாணும லூர்வன்மடல் நாளையே.

பெண்கலை முற்றிற்று.

---

‡ "திருந்தார்தொழுங்கழற்சேயன்னவாணன்றென்மாறைவெ
அருந்தாவமுதன்னவஞ்சொனல்லாரழகார்குழைதோய் [ற்பில்
பெருந்தாரைவேல்விழிதந்தவெங்காமப்பிணிதனக்கு
மருந்தாவதுநெஞ்சமேயில்லைவேறுமடலன்றியே."

தஞ்சைவாணன் கோவை.

மகா வித்வான்

புரசை அட்டாவதானம்

சபாபதிமுதலியாரவர்களா லியற்றிய

திருப்போரூர்

ஆண்டவர் வண்ணம்.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தானத் தந்ததனந் தானத்தன தாந்தந்
தானத் தந்ததனந் தானத்தன தாந்தந்
தன்னதனந்தானந் தன்னதனந்தானந்
தந்தத்தன தந்தத்தன தந்தத்தன தந்தத்தன
தந்தத்தன தந்தத்தன தையத்தன தான
தனனதன தானன தனந்தனா.

பூமிக் கின்புதவுங் காரிற்பொலி வான்சங்
காழிப் புங்கவனுங் காதற்சசி காந்தன்
சொன்மறைமுன்தேரும் தொன்மைசிறந்தோனும்
புந்திக்குளி யைந்தெட்டிணை யுந்தட்டற நின்றற்பொடு
சிந்தித்தனர் வந்தித்திடு-வெள்ளிக்கயிலாசர்
நாலெட் டுந்தருமம் பாரிற்புரி வான்பண்
டார்வத் தும்பரொடுஞ் சீர்கச்சியு ளார்ந்தங்
கெண்ணிலிகந்தேறுந் தண்ணளிதந்தாளும்
பண்பிற்செயு மன்பிற்குயர் செங்கைக்கிளி யஞ்சொற்பரை
மஞ்சிற்குல வும்பொற்கிரி-வல்லிக்கொருபாகர்
பூசித் தன்பர்களும் போதத்தவ மாண்பின்
பேறுற் றந்தணரும் பாசத்தடை நீங்குஞ்
சின்மயசம்போகந் துன்னுபரந்தாமம்
பொங்கத்தொடு ணர்ந்தெப்பொழு துந்துய்த்திட நண்புற்றனு
குஞ்சொற்ப்ரண வம்பெட்புறு-சையத்துறைநாதர்
பனகமணி பூஷணர் தருஞ்செவேள்,

பூசைக் கிந்த்ரனுளந் தேறிச்சுனை தோய்ந்தன்
பாயத் தண்சுனையின் போதுற்பல மூன்றும்
பன்னுதினந்தோறும் பொன்னடியின்சூடும்
தொண்டுட்கொடு சிந்தைக்குளு வந்தர்ச்சனைமுந்திச்செய
என்றைக்குமி ருந்துற்றருள்-செல்வத்தணிகேசன்
நீலப் பைஞ்சுனையின் பாலச் சுரர்வேந்துந்
தாலத் தண்டர்களுஞ் சாலப்பதி ஞன்கென்
றெண்ணுலகந்தாழும் புண்ணியநன்றுகுந்
தஞ்சத்திய லும்பற்றுற வந்திச்சைந யந்தற்புத
கஞ்சத்துத யம்பெட்பொடு-செய்வித்தகசேயன்
பூவிற் பொங்குமணம் போலத்தனி யாண்டுங்
கூடித் தங்குநலங் காணற்கரி தாம்சம்
புன்மைமறந்தோதும் பொய்ம்மைகொளுஞ்சூரன்
சிங்கத்துமு கன்சித்ரக்ர வுஞ்சத்தொடு தந்தித்தலை
யன்கொட்பற வென்றிட்டதொர்-கையிற்படைவேலன்
பரிவுள கணேசர் மகிழ்கந்தவேள்,

சேமப் பைம்பொனெடும் பாரக் குவடோங்குங்
கோலக் குன்றைங்குஞ் சேவற்கொடி வேந்தன்
தெண்ணிலவங்காலும் தண்மதியஞ்சாலும்
சங்கப்பணி லந்தத்தலை யுந்தத்தழை கண்டற்புதல்
அண்டித்தவழ் செந்திற்பதி-வள்ளற்குமரேசன்
சோதித் திங்களுடன் கூடிக்களி பாம்பும்
சூழச் செஞ்சடையின் கானிற்புனல் தாங்கும்
பண்ணவர்முன்பாரும் விண்முழுதுந்தாவும்
பைங்கட்கல பங்தொக்கவி ரிந்திட்டுவெ லஞ்சுற்றிவ
ரும்பச்சைநி றம்பெற்றொளிர்-தெய்வச்சிகியூர்தி
தேவர்க் கைந்தருவும் பூணிற்செறி கூர்ங்கொம்
பாசைக் குஞ்சரமும் சீர்மற்றுள பாங்கும்

தம்பிறைகொண்டாளுஞ் செம்மைபெறுங்காலம்
தங்கட்குற வெண்கைக்கரி தந்துய்க்கவ ளர்ந்திட்டரு
ளும்பொற்பிடி மங்கைக்கெழில்-வள்ளிக்குமணாளன்
கனிதமிழ் சபாபதி சொலும்பிரான்,

சேணிற் சந்ததமுங் காலைக்கதிர் காந்தும்
கோடிச் செஞ்சுடர்வந் தாலொத்தொளிர் சேந்தன்
பன்னிருதிண்டோளன் தென்னணிசெங்கோடன்
சந்தத்தமிழ் விஞ்சைக்கதி பன்சற்குரு வின்பப்பிர
சந்துற்றக டம்பிற்புனை-செவ்வித்திருமார்பன்
வாகைச் சந்தனசிந் தூரத்தொடு கோங்கும்
கோடற் குங்குமமும் பாளைக்குலை யீந்தும்
புன்னைவயங்காரம் சொன்னநறுந்தேனும்
சிந்திக்கன நந்திக்கிரி நின்றித்தரை சந்தித்தணு
வுந்தற்குறை யின்றிப்பெரு-வெள்ளத்திமிழ்பாலி
சீதத் தெண்டிரையின் பாணித்தில மீந்தும்
தேனுத் தந்திடனன் றுயித்திசை வாய்ந்தும்
பெண்ணையினுந்தூய்தென் றெண்ணநிதஞ்சூழும்
துங்கப்பதி யெந்தத்தவ ருஞ்சித்தர்க ளுஞ்சித்திபெ
றும்பட்சமு வந்துத்தம-வுய்வைத்தருபோரி
கருமுகிலு லாவுவரை யின்கணே.

பெண்கலை.

காமத் தின்கலகங் கூறிச்சமர் தூண்டுங்
கோவைப் பஞ்சசரம் போடத்தனி வாங்குங்
கன்னலடுஞ்சாபன் தன்னுளுவந்தேறுந்
தந்தக்கய மென்றுட்குற எண்டிக்குநி றைந்தெப்புடை
யுந்தைத்துநெ ருங்கிச்சொல-எல்லைக்களவாமல்

மூடிக் கொண்டுகொடும் பாவப்பயி ரோம்புங்
கேதத் தென்றுமகங் காரித்தெழு தீங்கும்
புன்னெறியுஞ்சூதுங் கண்ணுமனம்போலும்
பந்தித்துமயங்கிப்புவி யுஞ்சொர்க்கமு நுங்கிக்கிளர்
கங்குற்பொழு தின்கொத்தலர்-அல்லிற்கனியாமம்
காணக் கண் திருகும் பாடுற்றிமை கூம்பும்
தேவர்க் குஞ்சொலவுந் தாமெப்படி தோன்றும்
கன்மமிகுங்கோளன் சென்மபயந்தீரும்
சந்தர்ப்பமும் உண்டுய்த்திட என்றுட்கொள வுந்தக்கதி
வஞ்சத்திமி ரந்தப்புவ-தெவ்வர்க்குமொணுது
வனமருவி யாளியு மியங்குமால்,

காளிக் குந்திகிலுண் டாகச்சொலு காந்தம்
சாரப் பண்டுபெயுஞ் சோணைப்புயல் போந்தன்
றென்னவிரைந்தீரங் கொண்முமதம்பாயும்
கும்பத்தினை வெங்கட்பக டும்பற்றுகை பம்பிக்கொடு
சண்டப்பிர சண்டத்தெதிர்-மல்லிட்டமராடும்
சாடப் பிண்டுமனம் பேதித்தட லோய்ந்தும்
போருக் கஞ்சிவிழுந் தோலிட்டடி சாய்ந்தும்
பன்முருகமுஞ்சோரும் பின்னமடைந்தாகம்
புண்பட்டுமு றிந்தெய்த்தக முஞ்சொக்கிந டுங்கப்பொரு
சிங்கத்திர ளின்கொர்ச்சனை-சொல்லத்தரமேது
காதத் தும்படருங் கோபப்புகை கான்றும்
சேதித் தும்பொழியுஞ் சோரித்தசை மாந்தும்
கன்னமிடுஞ்சோரன் தன்மையெனுங்கோரங்
கண்டெடுத்துணை வன்கட்பகை யுஞ்செற்றபெ ருங்கொற்றவ
ருஞ்சித்தம தஞ்சத்திரி-சள்ளைப்புலிகோடி
வழிவருகி லேசமென கொஞ்சமோ,

நேமிச் செங்கையினன் தானப்புவி வாங்கும்
போதிற் சிந்துருவம் பாரித்தகி லாண்டங்
கண்மிசையும்போதந் தண்மிவளர்ந்தேயும்
புங்கப்படி வங்கட்புல முன்புக்கென நின்றட்டதி
கந்தத்துமொ ருங்கத்தொடர்-கல்வெற்புமநேகம்
சாரற் கண்பரவுஞ் சோலைக்கிளி போன்றஞ்
சாமற் றுன்றினர்நெஞ் சீடற்றிட வூன்றுங்
கன்னியர்சஞ்சாரம் பண்ணியிடுந்தாவங்
கொஞ்சத்தில டங்கத்தரம் அன்றெப்புற முந்துட்டம்ரு
கங்கட்கொர்ப துங்கற்கிட-மொல்லைத்தருகானம்
நேருற் றங்குடனிங் கோடித்திசை தாண்டுங்
கூர்மைத் தம்பெறியுஞ் சோரத்தொழி னோர்ந்திங்
கென்னெனவம்பாகுந் திண்மைசெயுந்தீரம்
கொண்டத்துறை வந்திட்டவர் தம்பட்டிமை வஞ்சத்துள
மூந்தக்கொலை மிஞ்சிப்புரி-கள்வர்க்குறவேது
இனிதல இராவருத லன்பனே.

நேரத் தொன்றுடனென் றாடிச்சம மூண்டண்
டாமற் சென்றுபடிந் தாழப்புன னீந்தும்
கண்ணனலங்கா லுந் துண்ணெனவுஞ்சீறுங்
கன்றிப்புன லின்கட்படி செந்துக்களை அங்கத்துடல்
துண்டிக்குமி டங்கர்த்தலை-துள்ளத்திரைமோதும்
ஆறச் சங்கொளவுண் டேகத்தடை யாந்தன்
சார்பிற் பின்துணையும் போதற்கிலை பாங்கன்
தன்னுடனுஞ்சேர்வின் றின்னணமிங்கேகுந்
தொந்தத்தைதநி னைந்திட்டிடி லெங்கட்கும னந்தத்துற
லன்றித்திட மெந்தப்படி-கொள்ளத்தகுமேலும்

நேசித் தின்றளவுந் தேடித்துயர் கூர்ந்துன்
காவற் கொண்டுறையுஞ் சூளுற்றனே வேண்டும்
பெண்ணமுதுந் தானேந் தின்னலுறுங்காணின்
சங்கத்தெதவை யுங்கற்றவர் தங்கற்பல இந்தத்துணி
வென்சொற்றிட நங்கைக்குமி-துள்ளச்சகியாது
இறையுமட மானினி பிரிந்திராள்,

அறுசீர் விருத்தம்.

பனகபணி பூஷணர் தருஞ்செவேள்
பரிவுள கணேசர்மகிழ் கந்தவேள்
கனிதமிழ் சபாபதி சொலும்பிரான்
கருமுகி லுலாவுவரை யின்கணே
வனமருவி யாளியுமி யங்குமால்
வழிவரு கிலேசமென கொஞ்சமோ
இனிதல விராவருத லன்பனே
இறையுமட மானினி பிரிந்திராள்.

முற்றிற்று.

திருப்போரூர் ஆண்டவர்

சுழியிலா வண்ணம்.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தானதனந்தன தானதனந்தன தையத்தாத் தானதந்தன
தானதனந்தன தானதனந்தன தையத்தாத் தானதந்தன
தத்தத்தா தாந்தனத்தன தத்தத்தா தாந்தனத்தன
தாந்தனந்தன தாந்தனந்தன தாந்தனந்தன தாந்தனந்தன
தனதனதனதன தனதனதனதன
தனதனதனதன தன்னதந்தனதான
தனதானத்தன தானதனதனதந்தனு.

பூமிசைதங்குயிர் யாவையுமுன்பருள் தல்லிக்காஸ் தானசுந்தரர்
மாதவர்கண்களி கூரநயந்தணி தில்லைக்கூத் தாடுசங்கரர்
பத்தர்க்கா ளாந்தரத்தினை நத்திச்சூழ் மாந்தருக்கருள்
பூம்பதங்கன காம்புயம்புரைசாந்தர்மின்சடை தாங்குகங்கையர்
புலவர்பரவவட நிழலிலமரவரு
குரவர்பதுமமணி-வண்ணமங்களநாதர்

தாரணியண்டச ராசரமுந்தனி யுய்யக்காத் தாளுமம்பிகை
பூரணியந்தரி ஆதிதிரியம்பகி வையத்தார்க் காகமுன்தன
சத்திக்கார் காஞ்சியுட்டரு மத்திற்சார் பாம்பயிர்த்திரள்
தான்பணும்பரை யாங்கனங்குழை தாழ்ந்திரைஞ்சினர் வாழ்ந்
தரும்அபயவரத கரதலதிரிபுரை [திடுங்கதி
புவனமலையுதவி-கன்னிபங்கினிவாசர்

பூசலிடுங்கட மானுலவுங்குடி லில்லித்தாய்ப் பாடிவந்தினி
தானிரையின்குழலூதியுவந்தடர்புள்ளைச்யாய்த்தாழ்வுறும்பல
புற்றிற்பாய் ப்ாம்பினத்திரள் பட்டுத்தூ ளாம்படிப்படர்
வீங்கிடுஞ்சிற காங்கருந்திசை தாங்குதந்திகள் நீங்கிவிண்டிட
விசைமிகுகருடனில் இவர்முரகரிமுத
லியநவவடிவினர்-அண்ணலங்கனதியாக
கயிலாசர்க்கினி தாகவருதிருமைனர்,

பூதியணிந்திடு சாதனர் தந்துயர் கல்லித்துய்த் தாருநிம்பந
னீழல்மர்ந்துறை யானைமுகன்றனை யுள்ளத்தாற் பூசைதந்துசு
வைக்கப்பா லாம்பிரக்கனி வைத்திட்டார் தாழ்ந்துசுற்றினர்
பூண்டஅன்பினி லாழ்ந்துபின்புடை சார்ந்துபண்பினி லான்றசி
இணையடிபணிபவர் நிலையுறமனதினில் [ந்தையில்
நினைவரமதுதர-முன்னிடுங்குருசாமி

தாருகனுங்கடி தானக்ரவுஞ்சமும் அல்லிற்கூட் டாகமுந்தரி
மாவதனன்கிளர் பானுவியன்பகை மல்லுக்காற் றுதழிந்திட
மட்டற்று ராம்படைக்குல முட்டிக்கூர் நாந்தகப்படை
சார்ங்கமம்புகைதாங்கிமுன்பயர்மூண்டயர்ந்ததுதான்பரிந்த
தனியிடசுரனுட லிருதுணிபடவிடு [மர்
மிருதலையயில்வல-மன்னும்அங்கைவிலாசர்

பூசுரருஞ்சுர ரானவரும்புகழ் வள்ளற்கீற் றுரும்அம்புயர்
யானையுடன்குற மாதுமணந்தவர்சூல்லைத்தார்ச் சூடுவிந்தையர்
புக்குற்று ரும்படித்தல முற்றுத்தா மீண்டியற்புத
சாந்தமிஞ்சியவான்பதந்தனை நீங்கருந்திறல் வாய்ந்துகண்டவர்
அகமகிழ்வுறவனு கிடுபசியகலப
நடனமயிலில்வரு-வண்மைதங்குமுலாசர்
கலைஞானத்திரு வாளர்மனதுறைகந்தனுர்,

நாமகளுந்திரு மாமகளுந்தரு கல்விக்கூட் டானவிஞ்சையும்
ஈகையுறுந்தன தானியமுங்கிளர் மல்லற்கூப் பாமநந்தமும்
உச்சிப்பா தாம்புயத்துணை வைத்துக்கா லூன்றியத்துணை
ஞான்றிறைஞ்சிடலீ.ந்திடுந்தகைசான்றதண்சுனைமூன்றருங்கடி
மலரவிழ்மணிமுடி வளர்தமநியசின
கரநிறைதணிகையில்-உண்மைமந்திரபுராணர்
மானவகந்தைகு ரூரமனங்கவர் சள்ளைக்கூட் டாளிமைம்புல
னீடியவிந்திர ஜாலபயம்படு பள்ளத்தீர்க் காமல்நந்தமை
மித்தைக்கூ ரும்பவக்கட லுக்குட்டாழ் தீங்ககற்றிய [தினை
வாம்சுகந்தனி லார்ந்தமைந்துறை பாங்குகண்டரு ளூன்றிடுங்

மணிசரவணபவ முருககுமரகுக
பரமபகவசிவ-சின்மயந்தருதூயர்
நாகர்வணங்கலை வாய்தனைஅண்டினர் கவ்வைத்தாழ்த்தியவன்
தீரகும்பழ நாசலமிங்கித வையைப்பாற் சீர்பரங்கிரி [பிணி
வித்தத்தா தாம்பல்நற்சத பத்ரத்தூ டார்ந்துதிர்த்திசை
பாண்புரிந்தளி தூண்டிமன்றலி னூண்பயன்கவர் சூழ்ந்ததண்
நறைதவழ்பழமுதிர் வனகிரிமுதலிய [டுறை
மலைதனிலுறைபவர்-கண்யகந்தகிரீசர்
இயல்கூரிஷ்ட்ட சபாபதிபுநிதசிந்தையார்.
நாடுவனம்பல யாறுழலும்பழி விள்ளச்சீத்தா தியந்தமி
லாதபரம்பர நாதசுயம்புவை வில்வத்தாற் பாதபங்கஜ
நட்புற்று ராய்ந்தருச்சனை யிட்டுப்பா லாம்பிகைக்கியல்
காந்தர்வந்திள மான்பவந்தனை யீர்ந்தபின்பக லாண்டணைந்திடு
சிவமுனிவசமலர் மகள்தனையுதவிய
பிரணவமலையது-தன்னில்நின்றுகுலாவு
பாலிநறும்புன லாறுபரந்திட மள்ளர்க்காற் றுவளந்தரு
சீலமுயர்ந்தது நூலையறிந்துணர் ஐயர்க்கீட் டாயமைந்தது
பற்றற்று ராந்தவத்தினர் நிட்டைச்சூ ளாம்பலத்தினை
வாய்ந்தகங்கையி லீண்டிடும்படி கான்புறங்கன காஞ்சியம்பதி
மதிதவழ்கழுமலை மயிலைநகரமுத
லியபலபதிபுடை-துன்னுதொண்டைநனாடு
ஞானவியன்கதிர் வீறுசிதம்பர துல்யர்க்காத் தூயநன்குரு
வாகவரும்பதி தாமமணங்கிளர் கள்ளைக்காத் தாவிவண்டின
நச்சுற்றாழ் தூங்கிசைக்குர லிட்டுத்தார் வீழ்ந்தடுத்துண
வான்சலஞ்சல மூர்ந்துபைங்குலை ஞாங்கர்தங்கரு வீன்றிடும்
மருவவுனதமணி மயகனகசிகர [பணை
முயர்சமரபுரியு-ளிந்நிலம்புகழ்பாடி
இனிதாகக்களி கூரவருமலையின்கணுள்.

பெண்கலை.

மாமதனன்கஜ மாகியதுன்றிருள் அல்லைப்பாற் றமுனங்கரு
மாலையிகழ்ந் தணிநாவிமணங்கமழ்மவ்வற்பூச் சூடியஞ்சன [மூல்
மத்தித்தாய் சாந்திழைத்தகி லுற்றுத்தாழ் வார்ந்தமைக்கு
ஈர்ங்கரும்பினை வாங்கிடுந்த நு ஊன்றுபண்பினில் நீண்டசிந்தூ
மதிநுதலுடனில கியசிறுபிறைநிகர்
இருபுருவவழகு-தம்மில்நின்றசமானம்
ஊசலிசைந்தன வாகவிளங்கிய வள்ளைச்சீர்த் தானவண்குழை
மாரனடுங்கணை யாழ்கடலம்புய னையக்கூற் றனதஞ்சியு
ளச்சத்தால் தான்களைத்தக மக்கிக்கால் சாய்ந்திளைத்திட
ஊன்படுந்திணி கூர்ந்தகுந்தமு னுங்கடும்படை சாம்பிநைந்திட
உயர்குவளையினலர் அரிபரவியமதர்
விழியிணையினுவமை-புன்னிடும்படியாது
வாகுறுநன்குமிழ் நாசியரும்பணி முல்லைப்பூப் பாயிணங்கிள
மூரலருந்திதழ் வாயதுகிஞ்சுக மல்லத்தீப் பானகண்டது
கட்டிச்சா றும்சருக்கரை முற்றுப்பா டார்ந்தமுக்கனி
கான்றிடுஞ்சுவை தாந்திரண்டுரு மாண்புறுந்தகை ஈண்டுவந்த
வளமலதிலைய தில் வருமினியலலித [ண
உசிதவசனமது-கன்னலின்சுவையூறல்
வியனூர்தத்தையு நாடுநயவுரைமுந்துவாள்,

வாலியசங்குப மானதரங்களில் உள்ளக்கூட் டாதகந்தர
மாசில்பசுங்கழை வாருதளைழந்திரு கையைப்பார்த் தாசிலங்கிரி
சுற்றிப்பாய் காந்தணற்றவ முற்றுத்தா னுங்கிழைத்தறு
மூன்றினங்குலி யான்றகன்றழ கார்ந்துமஞ்சுளம் வாய்ந்துபுன்
வடுசிகுசமகல வளரிளவடிவினில் [சிகை
இலகியதசைவுறு-வன்னமிஞ்சியமார்பு
கார்தவழுங்கிரி சாயநிமிர்ந்தடல் தள்ளிக்காட் டானைகண்டடர்
கானிலுறைந்திட வாதுபுரிந்திகல் வல்லைச்சாய்த் திடறும்பகை

வைத்துக்கா மாந்தரைப்பணி யிட்டுக்காழ் பூண்துகிற்புனை
காஞ்சனந்திகழ் பூங்குடங்குமிழ் தீங்குறும்பையின் வாங்கிடு
மணம்ருகமதபுள கிதபுநுகுகளப [ம்படி
மணிதன தடநிறை-கிண்ணமும்புறமாகும்
வாரிவலஞ்சுழி யாழியனநதிய தையத்தாற் காணருஞ்சிறு
நூலிடைகண்டது கூறவருந்தக வில்லைக்காய்க் காவரம்பையு
மத்தக்கார் மான்றுதிக்கையும் வைத்திட்டாலாந்தழைத்தக
வான்பசுந்தளிர் ஆய்ந்தபஞ்சுறழ் பூஞ்சதங்கைகள் சார்ந்தகி
மலரனமிடுகுரல் இசையினுநயமுர [ண்கிணி
முரலடிமடவரல்-தன்மைநன்றிசைவாக
மிகுசாயற்கிணை யாடுமயிலியல் விந்தையாள்,

காமர்சுரும்பினர் நாரிகரும்படல் வில்விற்பூட் டாமலும்பல
வாளிகள்அங்கச பாவிதுரந்தவை கவ்வித்தாக் காமலுந்திரை
தத்திக்கீ மூழ்ந்தமைக்கடல் உட்கக்காய் வான்கதிர்க்கனல்
காந்துதிங்களும் ஆங்கணன்றிலும் மாங்குருந்தைய வாங்கரு
களுமிடையிடைதுயர் புரிவதுதடைபட [குயில்
மனமிசையவிரக-சந்நகதங்கணிவாக
ஆவலுறுந்துணை யாகவிருந்தினி அல்லற்றீர்த் தாளல்தண்கட
லுதலறிந்தன ளாசைமிகுந்தனள் புல்லத்தாழ்க் காமலின்பவ
ளத்திற்சீர் தூண்டுசித்திர குத்துக்கால் தாங்குநித்தில
காந்திமிஞ்சிய தாஞ்சரம்பல பூண்டபஞ்சணை தூங்குமஞ்சமி
தணிமடவனநிகர் வுறவருதலுமிடை
தளர்வுறவிருதனம்-விம்முகின்றதுகாண
காதலரும்புவ தாழியினுந்தவ அல்லிப்பூத் தானமங்கையும்
நாடுசவுந்தர ரூபஅணங்கவிர் கிள்ளைப்பார்ப் பாருமங்கையள்
கற்றைத்தூர் சாந்தமட்டவிழ் புட்பத்தார் கூந்தலிட்டனள்
காண்டகும்பளி தாங்ககுங்கும மாங்கதம்பமும் ஆங்கணிந்
கரவளைகலகல இசைமுரலநயன [தனள்
அபிநயநவில்குறி-பண்ணிநின்றுறவாகி
மயல்நீடித்தன தாகிநிகழ்வுறு சிந்தையாள்,

காரிகையிந்தவி லாளிபுயந்தனில அள்ளிப்பூச் சாடுசந்தனம்
வீசியுவந்தனள் வாயிதழ்தந்தனள் கள்ளச்சூட் டானவிஞ்சை
கற்புத்தா னுய்ந்தமட்டளவைக்கற்றூர் காண்பதற்குளர் [கள்
காந்தமுந்தய மூண்டமைந்திடு மாண்பிணங்கிய தியாண்டசங்
அளவறிகரிகர கரணவகைகள்பல [கிடும்
விதமுளகுறிமுதல்-உண்ணுமின்பமுளூறி
சாதிசுரங்கள்நி தானவணங்களி மையற்பாட் டானசிந்துகள்
பாடலியம்புவள் சிரியமந்தர சையத்தாற் சாரவந்துசு
வர்க்கத்தார் மாந்துபுத்தமு தத்திற்பா கூர்ந்தஇச்சுக
மாந்தர்தங்கிய பாங்குறும்புவி ஈங்குகண்டிட யான்புரிந்திடு
தவபலனிதனிணே முனிவரர்மறுமையில்
அடைசுகநிகரல-பன்னுசந்திரசூரியர்
காணஇருந்திடு காறுநயந்தவள் உய்வைத்தூற் றுதிணங்குவள்
காமநலம்புரி சாடையறிந்தனள் பையைப்பார்த் தூடிரஞ்சித
கச்சுக்கூ டார்ந்தசக்கர பக்ஷித்தா னீந்திணேக்கையில்
வாஞ்சைதந்துகை தாங்கிநன்கினி சாஞ்சலங்களை நீந்திடும்படி
கலவியமுதநிலே சுரதவிபவகன
சரசசுரதநல-முன்னுசம்ப்ரமலீலே
வளமாருக்குரை யாடவிடுவல னுண்டுதான்.

எண்சீர் விருத்தம்.

கயிலாசர்க் கினிதாக வருதிரு மைந்தனுர்
கலேஞானத் திருவாளர் மனதுறை கந்தனுர்
இயல்கூரி ஷ்ட்டசபா பதிபுநித சிந்தையார்
இனிதாகக் களிகூர வருமலே யின்கணுள்
வியனூர்தத் தையுநாடு நயவுரை முந்துவாள்
மிகுசாயற் கிணேயாடு மயிலியல் விந்தையாள்
மயல்நீடித் தனதாகி நிகழ்வுறு சிந்தையாள்
வளமாருக் குரையாட விடுவல னுண்டுதான்.

இது

செய்கப்துல்காதிறு

நயினார்லெப்பை ஆலீம்புலவரவர்கள் பாடிய

மெல்லிசை வண்ணம்.

இராகம் - சஹானா - தாளம் - ஆதி.

தாந்தந் தந்தந்தந் தந்தந்தந் தந்தந்
தாந்தந் தந்தந்தந் தந்தந்தந் தந்தந்
தையன தந் தந்தந்
தையன தந் தந்தந்
தந்தந்தந் தந்தந்தந் தந்தந்தந் தந்தந்தந்
தந்தந்தந் தந்தந்தந் தந்தந்தன தான
தந்தந்த தாந்ததன தானனா.

வேந்தன் பொங்கன்பன் பண்பொன்றுஞ் சந்தஞ்
சேர்ந்தென் றுந்தம்பங் கொண்டின்பந் தந்திங்
கெவ்வுயி ருந்தொண்டஞ்
செய்வகை யுந் தங்குஞ்
சொந்தன்பந் தும்பந்தன் தன்பங்கின் பந்துன்பம்
மம்பங்கந் தொந்தம்பின் பொன்றுந்தொட ராத
சாந்தன் பண்டங்குஞ் சந்தங்கொண் டென்றுந்
தேர்ந்துங் கண்கொண்டுங் கண்டம்பன் றுங்கஞ்
சொல்லரி தெங் கெங்குந்
தொல்லரி தந் தந்தெண்
சிந்தம்புங் கம்பங்கிந் தென்றுங்கஞ் சங்கொஞ்சுஞ்
செங்கண்சண் டன்றுன்றுங் கங்கின்கண ராசி
வேண்டும் பொன்குன்றுங் கொன்சங்கின் சிந்துந்
தூங்குந் தன்செந்தண் டங்கொண்டுங் கண்டஞ்
செய்புமே னண் டன்கண்
டுய்யணி நண் கின்பைங்

கந்தஞ்சிந் துங்கொந்தின் சந்துந்தும் பண்டங்கும்
பண்டங்கன் கந்தின்றண் டுங்கங்கனி நாளும்
உண்டின்ப மேய்ந்தமறை மூலமே,

மீன்பம் பிந்தொன்றுந் தொண்டின்றெண் டம்பண்
சேந்தங் கங்கொண்டென் றும்போங்குஞ் செங்கண்
செய்யின னுங் கெஞ்சுந்
துய்யொளி வும் புஞ்சம்
பங்கின்கிண் டுங்கஞ்சஞ் செம்பஞ்சும் பின்பஞ்சூர்
தஞ்சம்பம் புந்திண்டன் சந்தந்திகழ் பாதர்
ஆன்கன் றுந்தண்டும் பொன்குன்றுந் துன்றும்
பாம்பும் பங்குந்தண் செங்கன்றுங் கண்டுந்
தெள்ளுநரை விண் டுந்தங்
குள்ளுற வுங் கொண்டண்
டும்பண்பொன் றுண்கண்கொண் டன்புந்தஞ் சந்தந்துஞ்
சொந்தந்தொந் தம்பந்துந் தம்பம்புரி நீதர்
வேங்கந் தம்பண்டஞ் சுண்டுந்துண் டங்கொண்
டுன்கண் டன்புந்துஞ் சும்பண்பின் றின்றும்
பெய்துறு நஞ் சொன்றுந்
செய்தில வன் றின்றும்
பொங்குந்துங் கந்தங்குங் கொங்குந்துங் குஞ்சந்தொங்
குந்திண்கந் தொன்றும்பண் பந்தம்புய நாதர்
ஒண்பண்களாய்ந்தகுண சீலராம்,

காந்துஞ் செங்கண்கொண் டண்டங்கெஞ் சும்புண்
டோய்ந்துந் தந்தத்தின் றுஞ்சண்டங் கிஞ்சுங்
கையிடை தண் டம்பும்
பொய்யுறை நெஞ் சம்புங்
கங்கந்துன் றுங்குந்தம் பங்கம்பம் புங்கந்துந்
தின்றென்புங் கண்டங்கம் பங்குந்தயி லாளர்

எய்ந்துஞ் செந்தந் தங் கும்பஞ்சங குன்றும்
பாய்ந்தெங் குங்குந்தும் பந்தின் திண் டுன்றுங்
கொய்யுளையும் பைம்பொன்
செய்யிரதங் கொண்டுஞ்
சிந்தென்றண் டும்பங்குண் டுண்டும்பண் டுந்தும்புன்
கண்டங்குங் கண்டங்கொம் புங்கொண்டடல் வீரர்
காண்டுஞ் சங்கின்சந் தஞ்சென்றங் கங்கம்,
போந்தண் டம்புண்டும் பின்பொங்குஞ் சிந்துஞ்
சொல்லெறி யுண் டுண்டுங்
கல்லெறி யுண் டுண்டுந்
துண்டங்கண் டங்கண்டந் தண்டங்கங் கொஞ்சுஞ்சம்
புங்கங்கங் கெம்புந்தின் றென்றுஞ்சய வாகை
கொண்டண்டர் தாழ்ந்துபுகழ்வேலராம்.

கான்சிந் துந்தெங்கின் கண்டொங்குந் திண்கண்
பாங்குந் தும்பின்பங் கந்துன்பங் கொண்டும்
பெய்முகி லின் றன்கண்
டுய்கயல் வந் தங்கண்
கொங்கின்செங் கஞ்சம்பஞ் சென்றன்பின் கண்டுஞ்சும்
பொன்பொங்கஞ் சம்பின்கொண் டஞ்சுஞ்செறி வாவி
பூங்கொங் கின்கொம்பின் கொங்குண்டொன்றுஞ் செங்கண்

....

டுள்ளனம் வண் டுந்தும்
புள்ளொடு சங் கும்பம்
புங்கங்கெங் கும்பங்கின் பங்கஞ்செம் பின்புஞ்சஞ்
சொண்டின்கண் கொந்துந்தந் தங்கொஞ்சுறு நாரை
கான்கொண் டுங்கண்டன் கொண்டுங்கிந் துஞ்சஞ்
சேண்கொண் டும்பந்தங் கொண்டென்றும் பொங்குஞ்
செய்மதி னஞ் சொந்தங்
கைபுனை சம் பந்தந்

தஞ்சங்கொண் டென்றுந்தன் கண்கொண்டோன் றும்பஞ்சம்
புன்கண்சென் றெஞ்சும்பொன் பொங்கும்படி யாளும்
கொங்கங்க மோங்குமகு மூதராம்

சாந்துஞ் செஞ்சந்தங் கொந்துந்துங் கஞ்சம்
போன்றும் பொன்கும்பம் பைங்குன்றும் பந்தும்
கைமலை யின் றந்தம்
பெய்மல ரின் புஞ்சஞ் [கண்
செண்டொன்றுந் தண்கெந்தங் கெம்புந்திண் டெங்கின்
புன்பிஞ்சுங் கண்டுஞ்சும் பண்பின்றன பாரம்
தாங்கும் பொன்கொம்புஞ் செங்கண்சிங் கங்கஞ்
தேய்ந்தும் பின்பிந்துஞ் சென்றொஞ்சுங் கொஞ்சங்
கையிடை யுண் டென்றும்
பொய்யிடை யுங் கொண்டுஞ்
செந்தங்கம் பண்பங்கங் கொண்சங்கம் பண்கண்டம்
பொங்கின்பந் துஞ்சுஞ்சுஞ் சந்தங்கிய சாயல்
தாண்டும் பங்கம்புஞ் செங்குந்தந் தண்டன்
பூங்கஞ் சம்பிஞ்சும் பங்கங்கொண் டெஞ்சுங்
கள்ளமு நஞ் சுஞ்சிண்
டுள்ளன வுந் துன்றுங் [ங்குந்
கண்கொண்டுங் குஞ்சந்தொங் குங்கொங்குஞ் சென்றெ
தண்டந்துந் தும்பந்துங் கொந்தின்குழ லோடு
கண்டின்ப மோங்குமொழி மானனர்,

தாழ்ந்துந் தம்பஞ்சம் புன்பங்கந் துன்பம்
போழ்ந்தின் பங்கொம்பும் புன்றந்தம் பம்புந்
துய்நகை யின் சந்தம்
பெய்நகை யன் புஞ்சிந் [ந்தந்
தும்பண்பின் பின்கொஞ்சுங் கொண்டொண்செண் டுந்த
துன்றஞ்சங் கண்கொண்டன் பின்றந்தினி தாளும்

காந்தன் பண்டன்றுந் தொந்தந்தன் பங்கின்
பாங்கின் றுங்கண்டொன் றுங்கொண்கன் சொந்தங்
கொள்விதி யென் றங்கந்
தெள்களி கொண் டண்டும் [கொண்டம்
பொன்றிஞ்சும் பெண்கொம்பென் றுஞ்சும்பின் கண்
பென்றெங்குஞ் சென்றுந்துந் துஞ்சும்படி யேவும்
தாந்தந் தண்கண்டம் பொன்றுண்டங் கொண்டும்
பாண்செஞ் சந்தந்துன் றின்பந்தந் தும்பின்
புள்ளுருகு ம் பண்புங்
கள்ளத ரந் தந்தும்
தம்பந்தின் றம்பெந்தின் றஞ்சந்தின் றன்சந்தின்
றங்கொங்கின் றம்பங்கின் றெண்டம்புரி வார்கள்
கங்கொன்று மாய்ந்தறிவின் மாய்கையார்,

சேங்தெங் கும்பொங்குங் கண்கண்டுஞ் செண்டும்
பாண்டுங் கொண்டங்கம் பைங்கண்டுந் தந்தம்
செய்தொழி லென் றம்பும்
பெய்தர முன் கொண்டும்
பொன்குன்றங் கண்டந்தும் செம்பஞ்சின் தண்கஞ்சங்
கிண்கிண்கிண் பண்கொஞ்சுந் தந்துங்கயி லாகை
சாய்ந்துந் தந்தம்பம் தம்பந்தம் பென்றுந்
தோய்ந்துந் தஞ்சிந்தந் தங்கந்தங் கந்தன்
கைவரு மென் றுங்கொன்
பொய்யுரை விண் டென்றன்
பந்தம்பந் தம்பந்தந் தெண்டந்தெண் டந்தெண்டென்
றங்கெஞ்சுங் கெம்புங்கெம் புந்தெந்தன மாமுன்
தேங்குந் தொஞ்சஞ்சுங் கண்டஞ்சுந் துன்பென்
றேங்கும் பின்சண்டங் கொண்டொன்றும் பண்பின்

புல்லிமு கந் தன்பின்
கிள்ளைய ணைந் தும்பஞ்
சொன்றின்றென் றெந்தெந்துந் தண்கெந்தம் பின்சிந்துந்
தொந்தின்பந் துங்கந்தந் தென்றும்புணர் வார்கள்
தொண்டென்று மேய்ந்துதுயர் வீசுவார்,
தேந்துன் றம்பண்டின் கண்டென்றுங் கெந்துந்
தேய்ந்தொன் றுந்தந்தம் புண்சிந்தும் பண்டங்
கொள்வெறி நெஞ் சுண்டும்
புல்வலை பந் தின்பங்
கெங்கெங்கும் பங்குண்டும் பின்சென் றுந் திண்டொஞ்சுங்
கண்டுஞ்சுந் தன்சொந்தங் கண்கண்டறி யாது
போன்றுங் கொன்பங்கம் பண்கொஞ்சங் கொண்டுந்
தேண்டுந் தண்டண்டந் தன்பண்பொன் றின்றும்
செய்தில னென் றென்றும்
பொய்தலை நின் றுந்தும்
சண்டன்கண் டன்றுண்டன் பங்கங்கன் றுன்பஞ்சென்
றின்பம்பந் துந்தஞ்சம் பொன்செஞ்சர ணைகு
தேம்பும் பந்தஞ்சங் கஞ்சந்தந் தந்தஞ்
சாந்தந் தங்குந்தம் பம்பம்பன் பின்கண்
கையிடை யுந் தந்துந்
துய்யியல் புங் கொண்டும்
கெஞ்சுங்கொஞ் சன்பஞ்சம் பொஞ்சண்புண் பிஞ்செஞ்சுந்
தொஞ்சஞ்சுங் கொங்கொன்றுந் தன்பண்பிணி தாளும்
தொந்தின்றி வாழ்ந்தமகு மூதாம்.

மெல்லிசை வண்ணம் முற்றிற்று.

வன்மெல்லிசை வண்ணம்.

தானன தன தந்தத்தந் தனத்தத்தந் தனத்தந்தந்
தானன தன தந்தந்தந் தனத்தத்தந் தனத்தத்தந்
தனந் தந்தன தனந் தந்தன
தனந் தந்தன தனந் தந்தன
தானத் தனதத்த தானத் தனதத்த
தனதன தனதன தனதன தனன
தனனதன தனனதன தனதன.

தாணிக ரிலை யுண்டென்றங் கவைக் கொப்பின் றிலைச்சுத்தன்
றனென நிறை புண்டுந்தங் குமெய்ப்பற்றன் பருக்குந்தந்
திடுஞ்சிந்தையி லடங்கின்றல
னுெடுங்கின்றவ னடுங்கொன்றிற
னுகத் துளாகத்தன் யாவர்க்கு மோகத்தன்
அருமறை முதலொரு பொருளுயர் சோதி
அகநிலை யின்பங்கொண் டொளிச்சித்தம் படிக்குத்தஞ்
செகமுமை யங்கணக்கொ டுதிட்டம் பெறக்கிட்டுண்
டமைந்தெங்கணு முறைந்துஞ்செயல்
புரிந்துங்கிர்பை யுவந்தன்புற
வேதிட்டி யாகத்தி னேன்மெய்ப்பத் தாய்வைத்த
தரளம தொளிமர கதமயில் ரூபர்
சாகரம தில் முங்குண்டும் புவிக்குட் டுன் பறப்பொற்பின்
பரமறை தனை யெங்கெங்கும் படிப்பித் துங் கொடுத்துப்பின்
பவங் கண்டுயர் தவந் தங்கவு
நவங்கண் டவர் களும் பண்பொடு
தாகத்தி னுன்மிக்க தீனுக்கு ளாயுற்ற
தவமுயர் பரகதி பெறவரு நாதர்
சமையமதி லுதவிபுரி தயவினோர்,

சாய்கை யடி யுந்தங்கின் றிலத் திக்கம் புவிக்குட்சென்
றேகில றியும் பின் றிறக்கக்கர் தரத்தைக்கொ

டருந் தண்குடை விரும் புஞ்சல
மலந் தங்கில நரந் தங்கமழ்
வாசத்தை பேயுற்ற தேகத்தி னூர்கத்தன்
ஒருபொருள் குறிபுய மதிலுறு நாதர்
வானக மதி லுந்துந்திங் களைச்சொற் கொண் டழைப்பித்துந்
தானிரு பிள வுண்டுந்தன் கரத்துட் சென் றுயர்த்திப்பின்
பொருந் தும்படி யுவந் தன்புசெய்
மிகுந் தெங்கணும் விளங் கும்புகழ்
தானுற்ற ஞானத்தி னோர்மிக்க னோர்நித்ய
மனமிசை யொருபொரு டணைமற வாத
தாமரை யடி நம்புந்தொண் டருக்குச் சொந் தமுற்றுக்கண்
பார்வை யருளன்புகொண் டுயர்த்திச் சிந் தையுட்பட்சம்
புரிந் துந்தய வுவந் துந்தவம்
விளங் கும்படி வரந் தங்கவு
மேபட்ச மேவைத்த நேசத் தினோர்மிக்க
தனியவ னறுசிடை கபுசுட னேகு
தருமநெறி பொறையறிவி னிலைமையோர்,

பானில மதில் வம்புந்துன் பிடக்குஞ் சிந் தையில்உற்றுச்
சிந்தே நிகர் குந்தஞ்சிந் தூரத்தைக்கொண் டமர்க்குத்திண்
டியும் பம்பையி னுடன் றம்புரு
நரம் பின்கரு வியுங் கொம்பொடு
மேளத்தோ டேடக்கை தாரைத்த டாரிக்கை
மணிபல திமிலைக டுடியொடு தூரிக்
காகள மொடு சங்கந்துந் துமிச் சத்தந் திருத்திச்செஞ்
ஜேகுண கிரு ததிந்தித்தெனத் தச்செக் கிணத்திந்தித்
திகுந் திந்திகு டுகுண் டுண்டுகு
டிகுண் டிண்டென முழங்குந் தொனி
மீதிற்ப ணோசைக்கோ ரேத்தி லேதிக்கு
வெளிபுவி கிடுகிடு கிடுகி டென

வாரண மென வந்தந்தங் கெதிர்க் கக்கண் டிடிக்கொப்பென்
றேஜெய முற வுந்தங்கந் துகத்திற் சிங்க மொத்துச்சென்
றடந் தங்கவர் சிறங் கண்டமு
முரந் துண்டொடு விழுந் தங்கமும்
வீழக்கை வாள்வெற்றி யாலிக்க மாநித்தன்
மகிழவர முறுநவ முளகருணேசர்
அமரரசர்கள் பரவு சரணினோர்,
மாதுள பண சங்கந்தம் புனைக் கொக்கின் றிரட்கொத்தின்
ருதகில் மகி ழுஞ்சந்தந் தனிப்புட் பம் பழத்தைத்தின்
றெழுந் துங்கவி யினஞ் சென்றதி
விழிந் துஞ்சுரை விழுந் தெண்டிசை
வாரிச்செல் போதிப்ப ஞகத்தின் மாணிக்கம்
விளைகழை வளைமணி யெனகதிர் வீசு
தேனதி செல முன்பின்சங் கினத்தைக் கண் டகத்தைச்சந்
தானுரு மயில் சென்றண்டம் பொழிற் கொப்பின் பெலத்தை
தடந் தும்புயல் நுழைந் துந்துளி [ச்சிந்
சொரிந் தங்கதி னெடுந் தங்கிட
வானுற்று லாவச்சசி போல்நித்த நீர்கொட்டு
வளமிக வளர்மது வயலிடை யோடி
வானள வுய ரும்பொன்செஞ்செநெற்கொப் பின் றிலைத்திக்கங்
கோடிடை நிழ லின்றங்கும் படிக்குத் தம் புரைக்கிச்செங்
கரந் தங்கிய வரம் பொங்கிய
தவந் திண்புகழ் விளங் குந்திரு
மாமக்க வாழ்வுற்ற கோவப்துல் லாபுத்ர
ரெனுமகு மதுமுகம் மதுமகு மூதர்
அரசுபுரி சுவனவரை யரிவையார்.

முற்றிற்று.

இந்த வன்மெல்லிசை வண்ணம் பாடிய புலவருடைய ஊர் பேர் முதலியன தெரிந்தில.

வண்ணம்.

ஆண் கலை.

இராகம் - மோகனம் - தாளம் - ஆதி.

தனதன தந்தந் தந்தந் தந்தந்
தனதன தந்தந் தனத்த தானன
தனதன தந்தந் தந்தந் தந்தந்
தத்தன தந்தந் தனத்த தானன
தனந்த தந்தந் தனனு தனந்த தந்தந் தனனு
தத்தத் தத்தத் தத்தத் தத்தத்
தானன தானன தானன தான
தானன தானன தந்த தானனு.

மதிகண மென்றுஞ் சென்றென் றுந்தும்
பற்பல வண்டந் தரித்த வானவர்
நவமணி சந்தஞ் சிந்தும் பொங்கம்
பொற் பதியுந்தங் குரித்தின் மாதரு
மெழுந்த குன்றுந் தொடராய் விளைந்த சிந்தும் படியோ
டெட்டுத் திக்கொக் கப்பட் டுற்றப்
பாரிடையேநட மாடியபூத
மிடையிடை யெங்குந் துன்றும் பண்பின்
சுற்றிவிளங்கும் கணக்கி டாவுயிர்
தகையுறு நெஞ்சங் கண்டன் பொன்றும்
பத்தியி னின்பங் கொடுக்கு நாயக
னனந்த னென்றுந் தனியோ னினங் கடந்தும் பிரியான்
மற்றெப் புச்சொற் கட்டிற் சிக்கிற்
காணரிதாகிய சோதியினுதி
மனவறை நின்றுங் கண்டுண் டங்கந்
தற்புற முய்ந்துஞ் செயற்கை யாலெழ

வருமத னின்பந் துன்பந் தண்டம்
பெற்றிட வென்றுந் தனக்கி லாதவன்
மறைந் திருந்துந் தெளிவாய் விளங்கி நின்றுந் தெரியான்
மிக்குற் றுச்சச் சித்தத் திட்பத்
தூமெழு பேரொளி வாகிய நாதர்
மாதவவாருதி முங்குமோலமே,

மறைவள முங்குஞ் சந்தங் கந்தம்
புத்தமு தின்பம் பழுத்த வாயின
ரருளெனு மஞ்சும் பண்புண் டன்பும்
பெற்றுயர் கஞ்சஞ் செழித்த பார்வையர்
மனந் திகழ்ந்தெண் டிசையே பரந்தெ ழுந்தண் புகழே
மிக்குற் றெருக்கத் தொக்குப் பட்டுத்
தாமெழு மேரினும் வீறுறை தோளர்
உளமது வெம்புஞ் சம்புந் துன்பம்
பட்டுழல் கங்கங் கொதித்த பாலையி
னதியென மண்டுங் குண்டுங் கொண்டுந்
தத்திய மிழ்ந்தும் படிக்கு நீவர
வருங் கரங்கொண் டருள்வோர் பெருந் தவந்தந் துயர்வோர்
மச்சச் செப்புச் சித்தித் தொக்கப்
பேசியகாரண மேவியநீதர்
மயில்வடி வங்கொண் டெங்கெங் குந்தன்
பொற்கதிர் சிந்தும் படிக் குலாவிய
முகமது வென்றும் பண்பின் புந்தும்
பற்பல செந்தும் பிழைக்க வேகவ
மிருந்து மெண்கண் டனிலே விளங்கு மின்றந் தணியாய்
மக்கத் திற்கொற் றத்துச் சுற்றுக்
காவலர் தாடொழ வாழ்மகு மூதர்
மாதவமுனி யன்பர்சீலமே,

கதிர்தரு மைம்பொன் செங்கஞ் சந்தண்
புட்பமு லர்ந்துந் தவக்க மேகொள
மலர்தரு மந்தம் பொங்குங் கொங்கின்
கொத்தொளிர் வண்சம் பதத்தி னுயகர்
மலங் களுந்துஞ் சமையா கமங் களொன்றுங் கணியா
தற்பிற் சித்தத் தட்பத் துச்சத்
தூடெழு மாமதி யாகிய போதர்
கொடுமை யனந்தந் தந்தஞ் செந்தம்
பற்பொரு ளென்றும் படைத்த சூரிய
வடிபடு மம்புந் தண்டுண் குந்தங்
கட்கமு மிஞ்சும் பிடித்த வாயுத
வினங்கள் கொண்டுந் தவருச் சினங் கடுன்றுங் கணினர்
மத்தத் தத்திக் கொற்றக் கற்கித்
தேரொடு தானைகள் வாருதி யாகக்
கசடுறை நெஞ்சின் சிண்டும் பந்தந்
தட்டி விளங்கும் பெருத்த வாயினை
ணபுசகு லண்டுந் தண்டங் கண்டம்
பட்டு விழுந்தெண் டிசைக்கு ளோடிட
வுளங் கனிந்துண் கணமே சுணங் குகங்குங் களியே
துய்த்துக் கத்திக் கத்திக் கெற்சித்
தாடிட மீறிய வீரிய வேலர்
காதவரூனுயி ருண்டவேலினர்,

கடிகமழ் கஞ்சந் துன்றும் பண்பின்
பொற்றிகழ் விந்தம் பொகுட்டின் மேவிய
வனமின மென்றும் பண்கொண் டின்பம்
பெற்று விளங்குந் தடத்தின் வாளைகள்
விரைந் தெழுந்தம் பரமேல் வளர்ந்த சந்தந் தருமீ

தெத்திக் கொத்துப் பிச்சிச் சுத்திப்
பாகமெ லாமெறி வாடைகண் மீறும்
வரியளி சிந்தும் பொங்குங் கந்தம்
பற்பல வண்டன் டலைக்கு ளேவளர்
குயில்கிளி கொஞ்சும் புஞ்சஞ் சந்தஞ்
சொற்கள் பரந்துஞ் செழித்த தோர்புய
றவழ்ந் திருந்தும் பலகால் சொரிந்த வெண்டண் பருமா
முத்துத் திக்கிற் பற்றிப் பெற்றுத்
தாவிய பேரொளி வீசிய சோலை
கணிவினி றைந்தும் பந்தம் பந்துஞ்
செய்த்தட மண்டுஞ் செழித்த சீரிய
ரருளும் விருந்துண் டெங்குந் தந்தஞ்
சித்தம கிழ்ந்தன் பகத்தி னோர்பலா
திரண் டரங்கந் தனிலே செறிந் தியம்பும் புறுக்கான்
மக்கத் திற்சொற் கத்திற் புக்குக்
கோல்புரிகாமிது மாகுழூதர்
காவலர் தாழ்தரு கின்றநீ தியார்.

ஆண்கலை முற்றிற்று.

திருமயிலை மகா வித்வான்

சண்முகம்பிள்ளையவர்களாலியற்றிய

திருக்கழுக்குன்றம்.

வேதகிரீசர் வண்ணம்.

காப்பு.

வஞ்சித்துறை.

வண்டுவனக்கரி புண்டரிகத்தாள்
கொண்டணைநெஞ்சே விண்டதுவினையே.

இராகம் - கல்யாணி - தாளம் - ஆதி.

தானந் தனத் தனந்தன தனந் தனந்தன
தனதனதனதன தனதன தான
தானந் தனத் தனந்தன தனந் தனந்தன
தனதனதனதன தனதன தான
தானதனதனதன தானதனதனதன
தானதன தானதந்தன.

† தலைவனை வியத்தல்.

ஞான னந் தனுக் கிடந்தரு நகந் தருங்கொடி
உமைபயி ரவுகவு ரியனருள் பாலை
சூதா குந் தனத் திலன்பொடு கரந் தரும்பர
சுகநிலை தருமமு தருமறை நாடு
சீகாழியின் மறையவர் கோமான்வயி னுதவிய

† "தலங்காவ லன்றஞ்சை வாணன்முந் நீர்பொருந் தண்பொரு
திலங்கார வல்வடக் கொங்கைவெற் பாலிணை நீலவுண்கட் [ந்தத்
பொலங்காம வல்வி கடைந்தவப்போது புடைபெயர்ந்து
கலங்கா திருந்ததெவ் வாறெம் பிரான்றன் கலைக்கடலே.
தஞ்சைவாணன் கோவை.

ஞானே யுங் குழற் பசம்பரை சினந் தவம்பன
விழியலை மகள்கலை மகளென லாகி
வானோ ருங் கடற் பெரும்புவி யொடும் படங்கிளர்
அரவர சருமுரை செயுமபி ராமி
நூலா னுவல் வரியதொர் மேலாநிலை யதுதர
ஞாலா விங் கினித் தநன்கவி வனைந் திடுந்தமி
ழுரையணு கியதொரு பரமகல் யாணி
தேசா ருங் கடத் தவைங்கர வனுங் குறிஞ்சியி
னிறையும னையெனமு னடைதர நாடி
யார்வோடவ ருடனினி தாநீடருள் புரிபவள்
போதார்விழி யாம டந்தையோர்,

ஞாவே யுங் குழற் சொலந்தரி கெடுந் திகம்பரி
திரிபுரை நிருமலை யொருசுக பாணி
பாவா ருந் தனிப் பெருந்தகை நவின் றிடும்பர
துரியமு டியதனி னிவர்தரு போத
மாயேயில கியநல மேயாகிய முழுமுதல்
மாமே வுந் திலைத் தலந்தனில் அரும் பொனம்பல
நடனமு டையபரி புரபத மேமுன்
வர்மே வும் புலிப் புதன்கலை சொலும்பதஞ்சலி
முனிகவு டர்களிறை மனநனி நாட
ஓயா தருள் புரிபவன் வேயார் தரு மரியவன்
ஞார் பேவுந் தவத் தநின்புற மடங் கலென்றனை
வருமிசை செயவட தருநிழன் மேவி
நீடா ருந் திணித் தசப்ப்ரம நலந் தருஞ்சுக
நிலைதரு மதிநய விதரண சீலன்
ஆருறகல் பவன்முழு நீருடிய குருபான்
போதாசன னோடு விண்டுதாழ்,

ஆனே றெந் துரைப் பரங்கிரி புறம் பியந்தகு
மதுரை வடவனம ருணைமுலை வாயில்
ஆரூர் மஞ் சிணர்த் திடம்பொழி னெடுங் களந்துறை
சைவிளமர் தருமபு ரமொடு நளாறு
காருயின னிலநெலை மாயூரம ருகல்பெரு
வேளூர் வெண் டுறைப்பெ ருந்துறை வலம் புரம்பரு
திநியம மறைசைபு கலிமழ பாடி
காரோ ணங் கொறுக் கைமண்டலி யிலங் கிடுன்சிறு
குடிமுது கிரியிடை மருதொரு கூவ
மாடானைய திகைவிய லூர்கோளிலி தினைநகர்
மாகா ளந் திருக் குடந்தைபு னமங் கைகண்டிம
யிலைவலி வலமதிள் செறிகுட வாயில்
பேரூ ரந் தரத் தரும்புகழ் எறும் பிதன்சிர
கிரிகொடு முடிகயி லையொடவி நாசி
யாரூரற நெறிகரு வூராநிலை நகரமர்
வேதாசல மேவு பண்பினன்,

ஆழூ ரென் றுரைத் திடும்பதி வரும் பெருந்திரு
வுடையர்த மையணுகி நலமொபாதி சோறு
தானே கொண் டளித்த சங்கர னருங் கலம்புனை
மணிமுலை பரவையி னிடையொரு தூத
னூரனி சைகவென வேயேகிய குணநிதி
பூபா ரந் தொலைப் பவன்றொரு தனஞ் சயன்பெற
விகலறு கணையுத வியவன வேடன்
மாலே கொண் டடுத் தொர்பஞ்சவ னெதிர்ந் துதந்திடு
மெழிறுகில் புரிகயி றதுகொடு நீவி
யேயாடல்செய் தனிமுதல் நாளாதினை யுடையவன்
மாமூ லந் தனிற் பரிந்தினி தடைந் துசங்கரி
முலையொடு வளைநனி படமகிழ் சாமி

தேனு ருஞ் சடைக் கணம்புலி கலங் கவந்திழி
புனறணி நிலவிட நிறுவிய சோதி
மீபூதரவி லன்விடை யேயூர்தரு மிமையவன்
மேதாவியர் நாடு குன்றிலே,

வானூர் கந் தரத் தரம்பெறு மருங் கருங்குழல்
மதிநுத லிருபுரு வமுமிணை சாப
மேயா குந் திரைப் பெருங்கடல் விடந் தலம்புக
ழூமுதுவடு வின்வகிர் குவளைய தாக
வேகூறிட வுவடரு கூர்வாள்பொரு மிணைவிழி
மாவா குந் தளத் தசெங்கம லமிந் திலங்கிய
முகமில விதழ்குமிழ் நிகர்தரு நாசி
வாயா மிங் கினித் தசெங்கனி சுமங் கலம்பெறு
மிடறிசை குலவிய வளையென நாளும்
நாவாயிவ ணுரைசெய மேவாவளை குழைபுனை
காதா குங் கடத் தகுஞ்சர மதன் றனன்பொல
முடிகல சவிணைக பொருதிடுமொர் சூது
தானு கும் புடைத் துவிஞ்சிய குநும் பைவென்றிடு
தனமணி யகலமு ழுதுமுற லாகி
யாராயினு மிணைசொல் லாமோமகி தலமிசை
போதொவிய மாத ரென்றுநேர்,

மாமோ கம் பெறத் தெரிந்தணை தரும் பசுங்கொடி
யெனவிறு துவளிடை விணினிடை யாரு .
மாமா தின் பெயர்ப் புனைந்துறு குறங் குநன்கமை
தணையெதிர் புயவிணை யொருகர மேதி
லாமாமலர் குலவிய தேமாவினி னுறுதளிர்
ஆமா நன் கனத் துமின்புரை மடந் தைத்தன்கவி
னரவன வகறரு மொரல்குலெ வாறு

நாமே யுங் குறிப் பதிங்குள மயர்ந் துயர்ந்தவர்
இணைநவி றரவரு சிகியன சாய
லேயாவொரு பிடியெகி ஞமேநடை தனிலிவண்
ஆசா ரந் தனைக் கொடன்பொடு பரன் பதந்தனை
நினைபவ ரருவினை களைபவர் சால
மாமே வுஞ் சிறப் பினந்தணர் பரிந் தநெஞ்சினர்
தமைமயல் கொடுசெல வகலிட மீதி
லேகோடிய செயல்புரி வார்தாளணி மலரொரு
போதேமன நாட வின்றியே,

தேனே யுஞ் சொலைச் சொலுங்கிளி யருந் தவஞ்செய
வருமொரு திருவென வெவருமு் சாவ
வேகா மன் றனுக் கரும்பென நலம் பெறும்பெடை
கரிசறு பதவிய லறுபத மான
சீகாமர விசைபயில் காரார்குழல் வனிதையர்
மாமா யந் தவிர்த் தவிஞ்சைய னிவந் திணங்கிய
புலவரு ளமகிழ திநயகு ணாளன்
நாடா ளுந் திறத் தரன்புறு ப்ரசங் கனிங்கித
னமலன டிபரவு நரையடை சீலன்
ஆறுமையி னிலமிசை யேசீர்பொது ளியகதி
தேசா ருஞ் செழித் ததிண்புய னகண் டசம்ப்ரம
சரசவி தரணச கலகுண மேரு
மாமா கங் கணித் தபுங்கவ னிரும் புரந்தர
னருணகி ரணநவ மணிமய க்ரீட
மானுபர ணனதிவி வேகானுகு லனிதயன்
யாதாநமை மேவி யின்றுநீ,

சீர்மே வுங் குணத் துநந்தவி லனந் தசொன்மறை
முடிபுசொ லரியதொர் பொருடக வோரு

மீதா னன் கணக் கறுங்கலை விதந் தெரிந்திடு
குசைநுனி யனையதொா றறிவின னீதி
தாஞேவறு நிலைமையின் மாமேருவை யனையவன்
ஆசே குந் துரைத் தனஞ்செயு மனங் கொளும்புனை
யறுநெறி யினனணி பெறுநிரு வாகன்
ஈரே ழுன் றெடுத் தியம்புல கினுஞ் செலும்புகழ்
கிளரிய வுரமுடை யவனிசை சாரு
நூலோதிய நடைமிக வேதேறிய வணிமையன்
கூர்வாய் வெஞ் சினத் தகங்கணை தருஞ் செழுஞ்சுடர்
மருவயி லுருகர னறுமலர் மாலை
யாவே யுந் திணித் ததிண்புயன் மருந் தெனுந்தகை
மையையியை பவன்வெகு மயலினில் வாடி
ஞுயினுமிதுசொல வேயாயின னினியெவன்
ஏகாயென வோதி நின்றதே.

வேதகிரீசர் வண்ணம் முற்றிற்று.

அவ்வரவர்கள் மனதுக்கியந்த வாறு தாளங்க ளமைத்துப்
பாடிக் கொள்ளவும்.

"மாறன்" அச்சுக்கூடம் புரசை சென்னை.

ஸ்ரீசாது இரத்தின சற்குரு புத்தகசாலை,
4-34, நயினியப்ப நாயக்கன் வீதி, பார்க்டவுன் சென்னை.

மாதர் நீதி.

முதலாவது இளமைப்பருவத்தில்:—

1-பள்ளிக்கூட முறைமை, 2-வீண்காலப்போக்கு, 3-து அப்பியாசங்கள், 4-உண்மை, 5-கீழ்ப்படிதல், 6-திருட்டுத்தனம், 7-வேடிக்கைப் பார்த்தல், 8-பரிசுத்தம், ஆக 8-வியாசங்களும், 6-கதைகளும் அடங்கியிருக்கின்றன.

இரண்டாவது கணவரோடு கூடிவாழும் பருவத்தில்:—

1-விவாகம், 2-நித்தியக்கடன்கள், 3-இல்வாழ்க்கை, 4-ஒற்றுமை, 5-கற்பு, 6-தருமகுணம், 7-வீண்செலவு, 8-பிள்ளைகளைப் பயிற்றுதல், 9-விருந்தினரையுபசரித்தல், 10-உபகாரம் 11-பெருமை மேன்மைப்படுத்துமென்பது, 12-புறங்கூறல், இகழ்ச்சியென்பது, 13-சண்டைபிடித்தல்புத்தியீனமென்பது 14-பரபுருஷரையிச்சித்தல் மகா கொடிதென்பது, 15-விபசாரிகளின் முடிவு, 16-சோம்பல் கேட்டைத்தருமென்பது, 17-அடக்கம், 18-பொறாமைதரித்திரத்தை யுண்டாக்குமென்பது 19-சுற்றத்தாருக்கிணங்க நடத்தல், 20-பேராசை பெருநஷ்டம் என்பது, 21-துன்மார்க்க புருஷனைச் சன்மார்க்கத்தில் திருப்புதல், 22-மனைவியின்யுக்தியினால் கணவனுக்குநேரிட்ட ஆபத்து நீக்கியது, அதாவது கணவனுக்குச் சமயத்தில் தக்க போதனை சொல்லிக்காப்பாற்றுதல், 23-பெண்பிள்ளைக் கல்வியின் உபயோகம், ஆக 23-வியாசங்களும், 12-கதைகளும் அடங்கி யிருக்கின்றன.

மூன்றாவது முதுமைப் பருவத்தில்:—

1-முதுமையில் ஸ்திரீகளுக்குண்டாகும் துர்க்குணங்கள் 2-ஸ்திரீகள் தம்மருமக்கள்மாருக்குச்செய்யும் கொடுமைகளும் அவற்றின் விளைவும், 3-ஸ்திரீகள் தங்கள் மருமக்கள்மாரை நடத்தவேண்டிய நல்வழிகள், 4-ஸ்திரீகள் முதுமையில் கவனித்து நடக்கவேண்டிய முறைமைகள், 5-ஸ்திரீகள் முதுமையில் தம்புத்திரருக்கடங்கி யிருக்கவேண்டுமென்பது, ஆக 5-வியாசங்கள் அடங்கியிருக்கின்றன.

பல முன் நூற்களை இந்நூலில் உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூபா—1.

உயர்ந்த பேதர் வெயிட்டு காகிதத்தில் அச்சிட்டது 1 8 0

இனிய தமிழ் நூல்கள்.

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் தமிழ் நூல்கள்

	ரூ.	அ.
கர்மயோகம்	1	0
இராஜயோகமும் பதஞ்சலியோகஸூத்ரமும்	2	4
பாரதநாட்டின்உயர்நிலை	2	4
வேதாந்த ரகசியம்	2	0
ஞானயோக ரஹஸ்யம்	2	4
கிழக்கும் மேற்கும்	0	8
எதிரொலிகள்	0	8
தற்கால இந்தியா	0	10
வேதாந்த தத்துவம்	0	8
கடிதங்கள்	1	0
எனது குருநாதர்	0	8
ஞான ரத்னவளி	1	8
(1004) உபதேசமொழிகள்	2	0
அருள் மொழிகள்	1	8
அத்வைத சம்பாஷணை	0	8
இராமயண ரகசியம், பாரத ரகசியம்	0	8
இராமகிருஷ்ணர் பிரஹமாநந்த சம்பாஷணை	3	0
ஷை கிளேஸ்	4	0
இராமதீர்த்த பரமஹம்ஸ விஜயம் முதற்பாகம்	1	4
ஷை கிளேஸ்	2	0
ஷை 2-ம் பாகம்	3	12

ஸ்வாமி சுப்பிரமணிய சிவம் நூல்கள்

	ரூ.	அ.
சச்சிதாநந்த சிவம்	1	2
மோக்ஷசாதனரகசியம்	4	0

முருகன் புகழ் நூல்கள்

	ரூ.	அ.
திருமுருகாற்றுப்படை பரிமேலழகர்உரை	0	8
ஷை கிளேஸ்	0	12
கந்தரந்தாதி மூலமும் வில்லிபுத்தூர்ஆழ்வா உரையும்	0	12
ஷை கிளேஸ் பதிப்பு	1	0
கந்தரநுபூதி உரை	0	8
ஷை கிளேஸ்	0	12
கந்தர்சஷ்டிகவசம்உரை	0	8
ஷை கிளேஸ்	0	12
கந்தரலங்காரம் உரை	0	8
ஷை கிளேஸ்	0	12
நாமாவளி கதம்பம்	0	8
த்யாகமலர்	0	2
யஜுஸ் திரிகால சந்தியா வந்தனமந்திரம், யஜ்ஞோபவீததாரண மந்திரம் தமிழ்	0	6
பரமார்த்த வினாவிடை	0	2
சங்கரர் அத்வைத உபதேச பஞ்சரத்நம்	0	6
அராபிக்கதை	3	8

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.